உ

Q28:19

சிவமயம்

ஸ்ரீ அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரலங்காரம்

## மூலமும்,

காஞ்சிபுர நிவாஸி மஹாவித்வான்

ஸ்ரீமத் இராமாநந்தயோகி அவர்கள்

இயற்றிய

## உரையும்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1924

விலை அணா 5

[All Rights Reserved]

கணபதி துணை

# கந்தரலங்காரம்

## மூலமும் உரையும்

### காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெ னப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

(பதவுரை) வருவார் - தரிசிக்க வருபவரது, தலையில் - சிரசில், தடபட என படு குட்டுடன்-தடபட வென்னும் ஓசையுடன் படுகின்ற குட்டுடனே, சர்க்கரை மொக்கிய - சர்க்கரையை விழுங்கிய, கை - துதிக்கையினையும், கடம் - மதசலத்தையும், தடம் கும்பம் - பெரிய கும்பஸ்தலத்தையும் உடைய, களிற்றுக்கு - யானை முகவனுகிய விநாயக மூர்த்திக்கு, இளைய களிற்றினை - இளைய யானையை, அடல் - வெற்றி பொருந்திய, அருணை - திருவருணை ஸ்தலத்திலுள்ள, திருக்கோபுரத்தே-அழகிய கோபுரத்தின்கண்ணே, அந்த வாயிலுக்கு-அந்த வாசலுக்கு, வட அருகில்-வடதிசையில், சென்று - போய், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன்.

(விசேஷவுரை) கும்பஸ்தலம்-மத்தகம். இளையகளிறு என்றது முருகவேளை.

## நூல்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமே [னுஞ்
லாற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே.

(ப - ரை) செம் சடா அடவிமேல் - செஞ்சடைக்காட்டில், ஆற்றை - கங்கையையும், பணியை - பாம்பையும், இதழியை - கொன்றைமலர் மாலையையும், தும்பையை-தும்பைமலர் மாலையையும், அம்புலியின் கீற்றை - சந்த்ரகண்டத்தையும், புனைந்த - தரித்தருளின, பெருமான் - சிவபெருமானுக்கு, குமாரன்-புதல்வனும், க்ருபாகரன் - கருணைக்கு இருப்பிடமாயுள்ளவனும் ஆகிய முருகக்கடவுள், பேறு ஐ-முத்திப்பேற்றினை யளித்தற்குரிய, தவம்-தவத்தொழில், சற்றும் இல்லாத-சிறிது மில்லாத, என்னை-அடியேனை, ப்ரபஞ்சம் என்னும் - உலகம் எனகிற, சேற்றை - அளற்றினை, கழிய - கடக்கும்படி, வழி விட்டவாறு - வழியேற்படுத்திவிட்ட விதம் இருந்தவாறென்னே.

(வி - ரை) ப்ரபஞ்சம் - வடசொல். சடா, அடவி என்பனவும் வடசொற்களே. பணி - பாம்பு, பணத்தையுடையது. பணம்-படம். பெருமான் - பெருமையுடையோன். சிவனிற் பெருமையுடையோ ெனாருவ னின்மையால் அவனைப் 'பெருமான்' என்றார். க்ருபாகரன் என்பதை க்ருபா+ஆகரன் எனப் பிரித்துக் கொள்க; ஆகரன்-பிறப்பிடமாயுள்ளவன் எனினுமாம் (க)

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின் றிலீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே. [ற்

(ப - ரை) அழித்து - சங்கரித்து, பிறக்கவொட்டா - பிறக்க வொட்டாத, அயில் வேலன்-கூர்வேலன் விஷயமாகிய, கவியை - பாடல்களை, அன்பால்-அன்போடு, எழுத்து பிழை அற-எழுத்துப் பிழையுண்டாகாமல், கற்கின்றிலீர்-கற்காதவர்களே!, (நீங்கள்)எரி மூண்டது என்ன-நெருப்பு மூண்டாற்போல, விழித்து-கண் விழித்து, புகை எழ-புகை யுண்டாம்படி, பொங்கு-சீறி வருகிற, வெம் கூற்றன்-கொடிய யமன், விடும் கயிற்றால் - வீசுகிற கயிற்றினால், கழுத்தில் சுருக்கிட்டு - கழுத்தில் சுருக்குப்போட்டு, இழுக்கும் அன்றோ-இழுக்கிற அந்த நாளிலேயோ, கவி கற்கின்றது-(அயில் வேலன்) கவியைக் கற்கப்போகிறது (நம் அறிவிருந்தவாறென்னை). அன்றோவென்னு மோகாரம் இரக்கம். (உ)

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

(ப - ரை) தேர் அணியிட்டு-தேர் அழகைக்கொண்டு, புரம்-முப்புரத்தை, எரித்தான் - எரித்தவனாகிய சிவபெருமானது, மகன் - புதல்வனாகிய முருகக்கடவுளின், செம் கையில் - சிவந்த திருக்கரத்திலுள்ள, வேல் - வேற்படையின், கூர் - நுனியானது, அணியிட்டு - தைத்து (அதனால்), கிரௌஞ்சம் அணுவாகி - கிரௌஞ்சமலை அணுரூபமாகி, குலைந்து - நிலைகெட்டு, அரக்கர் - இராக்கதாது, நேர் அணியிட்டு வளைந்த-நேராகக் கட்டி வளைந்து கொண்ட, கடகம் - கடக மென்னும் படைப்பிரிவானது, நெளிந்தது - முதுகு வளைந்தது; சூர் - சூரபன்மனது, பேர் அணி கெட்டது - பெரிதாகிய படைவகுப்பு அழிந்தது; தேவேந்த்ரலோகம் பிழைத்தது - தேவேந்த்ரலோகம் உஜ்ஜீவித்தது.

(வி-ரை) புரமெரித்தான் என்றது சிவபெருமானைக் குறித்தது. கடகம் - ஓர் படைவகுப்பு. தேவேந்த்ரலோகம் - சுவர்க்க லோகம். (௩)

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

(ப-ரை) தேவர் உய்ய-தேவர்கள் பிழைக்கும்படி, சென்று-போய், சோரம்-திருட்டுத்தனமுள்ள, நிட்டூரனை சூரனை - துஷ்டனாகிய சூரபன்மனது, கார் உடல் - கறுத்த உடம்பு, சோரி கக்க - உதிரத்தை உமிழும்படி, கூர-கூர்மையையுடைய, கட்டாரி இட்டு-வேற்படையைக் கொண்டு, ஓர் இமைப்போதினில் - ஒரு நொடிப் பொழுதில், கொன்றவனே - வதைத்தவனே!, ஐவர் - ஐந்துபேர், ஒன்றை-ஒரு பொருளை, ஓர ஒட்டார் - ஆராயவிடார், உன்ன ஒட்டார்-நினைக்கவும் விடார், மலர் இட்டு-புஷ்பங்களால் அர்ச்சித்து, உனதாள் - உன் திருவடிகளை, சேர ஒட்டார் - அடையவிடார், (இதற்கு) யான் செய்வது என் - யான் செய்யக்கடவது யாது?

(வி-ரை) ஒன்றை என்றது ஒப்பற்ற கடவுளை. ஐவர் என்றது பஞ்சேந்திரியங்களை. கட்டாரி என்றது ஈண்டைக்கேற்ப வேற்படையை உணர்த்திற்று. (௪)

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பா
லருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோது குவலயமே.

(ப-ரை) திருந்த-திருத்தமாக, புவனங்கள் - எல்லா வுலகங்களையும், ஈன்ற - பெற்ற, பொன்பாவை - உமாதேவியின், திரு

முலைப்பால் - திருமுலைப்பாலை, அருந்தி-குடித்து, சரவணம் - சரவணப் பொய்கையிலுள்ள, பூ தொட்டில் ஏறி - அழகிய தொட்டிலில் ஏறி, அறுவர்-ஆறு தாய்மாரது, கொங்கை-திருமுலைப்பாலை, விரும்பி - இச்சித்து, கடல் அழ - கடல் அழவும், குன்று அழ - மலை அழவும், சூர் அழ - சூரன் அழவும், விம்மி அழும் - தானும் விம்மி யழுத, குருந்தை - குழந்தையை, குவலயம் - உலகமானது, குறிஞ்சி கிழவன் என்று - குறிஞ்சிநிலக்கிழவனென்று, ஓதும்-சொல்லாநிற்கும்; ஏ-இதென்ன வியப்பு.

(வி - ரை) பொற்பாவை-ஆகுபெயர். அறுவர்-கார்த்திகைப் பெண்கள். குன்று-கிரவுஞ்சமலை. கிழவன்-விருத்தன், உரியவன்.

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற
பேதைகொங்கை, விரும்புங் குமரனை மெய்யன்பி னுன்
மெல்ல மெல்லவுள்ள, வரும்புந் தனிப்பர மானந்தந் தித்
தித் தறிந்தவன்றே, கரும்புந் துவர்த்துச்செந் தேனும்
புளித்தறக் கைத்ததுவே.

(ப - ரை) பை - பசுமையாகிய, பெரு புனத்தினுள்-பெரும் புனத்தினுள்ளே, சிறு ஏனல் காக்கின்ற - சிறிய தினையைக் காக்கின்ற, பேதை - குறப்பெண்ணின், கொங்கை-தனத்தை, விரும்பும் - இச்சித்த, குமரனை - குமாரக்கடவுளை, மெய்யன்பினால் - உண்மையாகிய அன்போடு, மெல்ல மெல்ல உள்ள - பையப்பைய நினைக்க, தனி - ஒப்பற்ற, பரமானந்தம் - பேரின்பம், அரும்பும்-உண்டாகும்; (அது) தித்தித்து அறிந்த அன்றே - இனித்து அறிந்த அன்றைக்கே, கரும்பும் - கருப்பஞ்சாறும், துவர்த்து - துவராகி, செம் தேனும் புளித்து-செந்தேனும் புளிப்பாகி, அற கைத்தது - மிகக் கசந்துவிட்டது.

(வி - ரை) பேதை - பருவங் குறியாது பெண் பொதுவைக் குறித்தது. (௪)

சளத்திற் பிணிபட்ட சட்டுக் ரியைக்குட் டவிக்குமென்ற
னுளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துங் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேறொட்ட காவலனே.

(ப - ரை) கழுது - பேய்கள், அவுணர் - அரக்கரது, உரத்து- மார்பில், உதிரக்குளத்தில்-ரக்த தடாகத்தில், குளித்து - முழுகி, குதித்து-குதித்து, களித்து-மகிழ்ந்து, குடித்து - பருகி, வெற்றிக் களத்தில் - வெற்றிக்குரிய போர்க்களத்தில், செருக்கி-கர்வித்து, ஆட - கூத்தாட, வேல் தொட்ட - வேலேவின, காவலனே-அரசனே!, சளத்தில் - துன்பக் கயிற்றினல், பிணிபட்ட, - கட்டுப் பட்ட, சட்டு க்ரியைக்குள் - உடற்றொழிலிற் சிக்கி, தவிக்கும்- தவிக்கிற, என்றன்-எனது, உளத்தில்-மனத்திலுள்ள, ப்ரமத்தை- மயக்கத்தை, தவிர்ப்பாய் - ஒழித்தருள்வாய்.

(வி - ரை) சளம் - சலம் என்னும் வடசொற்றிரிபு. சட்டு - உடல். க்ரியை, ப்ரமம் என்பன வடசொற்கள். (எ)

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மே
லளியில் விளைந்ததொ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்தவெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

(ப - ரை) ஒளியில் விளைந்த-ஒளியி லுண்டாகிய, உயர்-உயர்ந்த, ஞானபூதரத்து-ஞானமலையின், உச்சியின்மேல் - சிகரத்தின் மீது, அளியில் விளைந்தது - க்ருபையோடு உண்டானதாகிய, ஓர்- ஒப்பற்ற, ஆனந்தத் தேனை - இன்பமாகிய தேனை, அநாதியிலே - அநாதிகாலத்திலேயே, வெளியில்-வெள்ளிடையில், விளைந்த-உண்டான, வெறும் பாழை - சூனியத்தை, பெற்ற-அடைந்த, வெறும் தனியை - வெறுந்தனிமையை, தெளிய-தெளியும்படி, முகம் ஆறு

உடை - ஆறுமுகங்களையுடைய, தேசிகன்-குருநாதன், விளம்பிய வாறு-எனக்கு உபதேசித்தவாறு என்ன வியப்பு.

(வி - ரை) பூதரம் - மலையென்னும் பொருள் குறித்த வடசொல். (அ)

தேனென்றுபாகென்றுவமிக்கொணாமொழித்தெய்வவள்ளி
கோனன்றெனக்குபதேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே.

(ப - ரை) தேன் என்று - தேனென்றும், பாகு என்று-பாகென்றும், உவமிக்க ஒண்ணா - ஒப்பிடக்கூடாத, மொழி - இன்சொல்லையுடைய, தெய்வம்-தெய்வத் தன்மையுள்ள, வள்ளி-வள்ளியம்மைக்கு, கோன் - நாயகனாகிய முருகக்கடவுள், அன்று - அந்நாளில், எனக்கு உபதேசித்தது - எனக்கு உபதேசம் செய்தது, ஒன்று உண்டு - ஒருபொருளுண்டு; (அது) கூறவற்றோ - சொல்லுந் தன்மைத்தோ; வான் அன்று - ஆகாயமல்ல, கால் அன்று - காற்றல்ல, தீ அன்று - நெருப்பல்ல, நீர் அன்று-நீரல்ல, மண்ணும் அன்று - மண்ணுமல்ல, தான் அன்று - தானல்ல, நான் அன்று - நான் அல்ல, அசரீரி அன்று - அசரீரியல்ல, சரீரி அன்று - சரீரி அல்ல.

(வி - ரை) அசரீரி, சரீரி என்பன வடசொற்கள் (அருவங்கள், உருவங்கள்.) (கூ)

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்துசும் மா
விருக்கு, மெல்லையுட் செல்ல வெனைவிட்ட வாவிகல் வேல
னல்ல, கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரை
கொவ்வைச்செவ்வாய், வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோளண்ணல் வல்லபமே.

(ப - ரை) இகல் வேலன்-வெற்றிவேலையுடையவன், நல்ல - சிறந்த, கொல்லியை சேர்க்கின்ற சொல்லியை - கொல்லிப்பண்ணைச் சேர்க்கின்ற சொல்லையுடையவளை, கல்வரை - கல்மலையில் வாழ்கிற, கொவ்வை - கோவைப் பழம்போன்ற, செவ்வாய் - செவந்த வாயினையுடைய, வல்லியை - வள்ளிநாயகியை, புல்கின்ற - தழுவுகிற, மால் - பெரிய, வரை - மலைபோன்ற, தோள்-புயங்களையுடைய, அண்ணல் - முருகக்கடவுளின், வல்லபம்-வல்லமை, சொல்லுகைக்கு இல்லை யென்று - பேசுதற்கில்லை யென்று, எல்லாம் இழந்து - எல்லாவற்றையு மிழந்து, சும்மா இருக்கும்-சும்மா இருத்தற்குரிய, எல்லையுள் செல்ல-எல்லையிற் பிரவேசிக்க,என்னை - அடியேனை, விட்டவா - விடுத்த விதம் என்ன வியப்பு.

(வி-ரை) கொல்லி-ஓர் பண். செவ்வாய் என்றது அதரத்தை.

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு வடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட வத்தூளின் வாரி திடர்பட்டதே.

(ப-ரை) வெற்றி வேலோன்-வெற்றிவேலையுடையவனாகிய முருகக்கடவுள், குசை நெகிழா - கடிவாளம் நழுவாததும், கசையிடு-சவுக்கினால் அடிக்கப்பெற்றதுமாகிய, வாசி-குதிரையானது, அவுணர் குடர் குழம்ப - அரக்கரது குடர் குலையும்படி, விசை கொண்ட - விசைகொண்டெழுந்த, வாகனம் - வாகனமாகிய மயிலின், பீலியின் கொத்து - தோகையின் கொத்து, அசைபடு - அசைகிற, கால்பட்டு-காற்றுப்பட்டு, மேரு அசைந்தது-மேருமலை அசைந்தது; அடியிட - அடிபெயர்த்து வைத்தலும், எண் திசை வரை - அஷ்டதிக்கிலுள்ள மலைகள், தூள்பட்ட - தூளாயின; அ- அந்த, தூளின் - தூளால், வாரி - கடலானது, திடர்பட்டது - மேடாய்விட்டது.

(வி - ரை) குடர்-ஈற்றுப்போலி. பீலி - தோகை (கலாபம்). தூளின் என்பதில் இன் மூன்றுவதன் கருவிப்பொருள் தந்து நின்றது. (கக)

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந் [ந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுப்படல
மிடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

(ப - ரை) படைபட்ட - கொலைத் தொழிலையுடைய, வேலவன்பால் வந்த-வேலவனிடத்தில் வந்த, வாகைப்பதாகை என்னும்- வெற்றிக்கொடி யென்கிற, தடைபட்ட சேவல் - மறியற்பட்ட சேவலானது, சிறகு அடிக்கொள்ள - சிறகடித்துக்கொள்ளுதலும், சலதி - கடலானது, கிழிந்து-கிழிபட்டு, உடைப்பட்டது-உடைந்தது; அண்ட கடாகம் உதிர்ந்தது - அண்டமுகடு உதிர்ந்தது; உடுப்படலம் - மீன் கூட்டங்கள், இடைபட்ட - தடுமாறின; குன்றமும் - மலைகளும், மா மேருவெற்பும் - பெரிய மேருமலையும், இடிபட்ட - இடிந்துபோயின.

(வி - ரை) படை - படுத்தல். பதாகை - பதாகா என்னும் வடசொற்றிரிபு: சலதி - ஜலதி யென்னும் வடசொற் றிரிபு. உடு, படலம் என்னும் இரண்டும் வடசொற்றிரிபுகளே. ஏ - ஈற்றசை, வியப்பிடைச்சொல் எனினுமாம். (கஉ)

ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிங்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

(ப - ரை) ஒருவரை - ஒப்பற்றவராகிய சிவபெருமானை, பங்கில் - தன் வலப்பாகத்தில், உடையாள் - உடையவளாகிய உயா

தேவியின், குமாரன் - புதல்வனாகிய முருகக்கடவுளின், உடைமணி சேர் - உடைமணி தங்கிய, திருவரை கிங்கிணி - திருவரையிற் கட்டப்பட்ட கிங்கிணியின், ஓசை - ஒலியானது, பட - படுதலும், அரக்கர் - அவுணர், திடுக்கிட்டு வெருவர - திடுக்கிட்டு அஞ்ச, திக்கு செவிடுபட்டு - திக்குகள் செவிடுபட்டு, எட்டு வெற்பும்-அஷ்டகுலாசலங்களும், பருவரை-பெரிய மலையாகிய, கனகக்குன்றும்-பொன் மலையும், அதிர்ந்தன - அதிர்ந்துவிட்டன; தேவர் பயம் கெட்டது - தேவர்கள் அடைந்திருந்த அச்சம் ஒழிந்தது.

(வி - ரை) உடைமணி - அரையிற் கட்டுமணி. கிங்கிணி - வடசொல். கனகம், பயம் என்பனவும் வடசொற்றிரிபுகளே. (கரு)

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பு
மப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

(ப - ரை) இருநான்கு வெற்பும் - எட்டுக்குலமலைகளும், அப்பாதியாய் விழ-அந்தப் பாதியாய்ப் பிளந்து விழவும், மேரும் குலுங்க - மேருமலையும் அதிரவும், விண்ணாரும் உய்ய - தேவரும் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய - சப்பாணி கொட்டியருளின, ஆறு இரண்டு கை உடை - பன்னிரண்டு கைகளையுடைய, சண்முகனே - அறுமுகனே!, கு பாச வாழ்க்கையுள்-லோகபாசமாகிய வாழ்வினுள்ளே, கூத்தாடும் - கூத்தாடுகிற, ஐவரின் - ஐவரால், கொட்பு அடைந்த-சுழற்சி யடைந்த, இ - இந்த, பாச நெஞ்சனை - பாசமனமுடையேனை, ஈடேற்றுவாய்-ஈடேற்றக்கடவை.

(வி - ரை) குப்பாசம் - போர்வை யெனினுமாம். ஐவர் என்றது பஞ்சேந்திரியங்களை. (கசா)

தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றேபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகட்டுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.

(ப-ரை) அன்று - அந்நாளில், மாவலிபால் - மாவலியினிடத்து, மூவடி படி கேட்டு-மூன்றடி மண்ணை யிரந்து, மூது-பழைய, அண்ட கூடம் - அண்ட கூடத்தின், முகடு முட்ட-முகட்டிற்பட, சேவடி நீட்டும் - திருவடியை நீட்டின, பெருமான்-திருமாலுக்கு, மருகன் - மருகனாகிய முருகக்கடவுளின், சிற்றடி-சிற்றடியானது, தாவடி ஓட்டும்-போர்க்களத்தில் செலுத்துகிற, மயிலும்-மயிலின் மேலும், தேவர் தலையிலும் - தேவர்களுடைய தலைகளின்மேலும், என் பா - என் பாடல்கள், வடி-எழுதப்பட்ட, ஏட்டிலும்-ஏட்டின் மேலும், பட்டது அன்றே - பட்டதல்லவா (இதென்ன வியப்பு).

(வி-ரை) தாவடி-போர். படி-பூமி. பால்-எழனுருபு. (௧௫)

தடுங்கோண் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமெ
மிடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக் [ன்று
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

(ப - ரை) (அன்பர்களே!) மனத்தை தடுங்கோள் - மனத்தைப் பொறிவழியே செல்லாமல் தடைசெய்யுங்கள்; வெகுளியை விடுங்கோள் - கோபத்தை விட்டொழியுங்கள்; என்றும்-எந்நாளும் தானம் இடுங்கோள் - தானஞ் செய்யுங்கள்; இருந்தபடி இருங்கோள்-இருந்தவாறே யிருங்கள்; (இப்படிச் செய்வீர்களாயின்) உமக்கு - உங்களுக்கு, எழு பாரும் உய்ய - எழுலகும் பிழைக்கும்படி, கொடுங்கோபம் - மிக்க கோபத்தையுடைய, சூருடன் - சூரனுடன்,

குன்றம் - கிரவுஞ்சமலையும், திறக்க துளைக்க-பிளக்கும்படி துளைக்கும்பொருட்டு, வை வேல்-கூர்மையாகிய வேற்படையை, விடும் - எவின, கோள் - முருகக்கடவுளின், அருள் - அருளானது, தானே வந்து வெளிப்படும்-தானே வந்து வெளிப்படத் தோன்றும்.

(வி - ரை) இருந்தபடி யிருத்தலாவது சும்மாவிருத்தல். வை-கூர்மை. (கசு)

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக வல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே.

(ப - ரை) மனமே - நெஞ்சே!, வேதாகமசித்ரவேலாயுதன்-முருகக்கடவுளின், வெட்சி பூத்த-வெட்சிமலர் மலர்ந்த, தண்டை-தண்டையணிந்த, பாதாரவிந்தம்-திருவடித் தாமரைமலரே, அரண் ஆக-எமக்குக் காவலாகக் கொண்டு, அல்லும் பகலும் இல்லா - இரவும் பகலு மில்லாத, சூதானது அற்ற - சூதற்ற, வெளிக்கு-வெளியில், ஒளித்து - மறைந்து, சும்மாவிருக்க-சும்மாவிருக்கும் பொருட்டு, இனி போதாய் - இனி வருவாயாக, (இந்தச் செய்தி) ஒரு பூதர்க்கும் - ஒருவருக்கும், தெரியாது - தெரியவொண்ணாது.

(வி - ரை) வெட்சி - ஓர்மரம். சூது - கபடம். சூதற்றது-நிர்மலமானது. பூதர் - பூதசரீரிகள். (கஎ)

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

(ப - ரை) (உலகீரே!) வையின் - கூர்மையோடு, கதிர்-ஒளி யையுமுடைய, வடிவேலோனை - முருகக்கடவுளை, வாழ்த்தி - துதித்து, வறிஞர்க்கு - ஏழைகளுக்கு, என்றும் - நாள்தோறும், நொய்யின் பிளவு அளவு ஏனும் - நொய்ப் பிளப்பி னளவாயினும், பகிர்மின்கள் - பகிருங்கள்; நுங்கட்கு - உங்களுக்கு, இங்ஙன்-இங்கே, வெய்யிற்கு ஒதுங்க உதவா - வெய்யிலுக்கு ஒதுங்கி நிற்கவும் உதவாத, உடம்பின் - சரீரத்தின், வெறு நிழல்போல் - வெறு நிழல் போல, நும் கடை வழிக்கு-உங்கள் கடைவழிக்கு, கையில் பொருளும் உதவாது - கைப்பொருளும் உதவமாட்டாது.

(வி - ரை) வடிவேல் - வடித்த வேல்; வடித்தல் - தீட்டிக் கூராக்குதல். வெறு நிழல் - நிழலன்மை. கடை வழி-கடைநாளிற் போம் வழி (மரணகாலம்). காண் - அசை. (கஅ)

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற் றுந்
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூ
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

(ப - ரை) சொன்ன-சொல்லப்பட்ட, கிரௌஞ்சகிரி-கிரவுஞ்சமலை, ஊடுருவ - ஊடுருவிப்போம்படி, துளைத்த - தொளை செய்த, வை வேல்-கூர்வேலையுடைய, மன்ன - அரசனே!, கடம்பின் மலர்மாலை-கடப்ப மலர்மாலையை அணிந்த, மார்ப-மார்பனே!, மௌனத்தை உற்று - மௌனநிலையை யடைந்து, நின்னை உணர்ந்து உணர்ந்து - உன்னை அறிந்தறிந்து, எல்லாம் ஒருங்கிய-எல்லாமொருப்பட்ட, நிர்க்குணம் பூண்டு - நிர்க்குணம் பெற்று, என்னை மறந்திருந்தேன்-என்னை யறியாதிருந்தேன்; இவ்வுடம்பு இறந்தே விட்டது - இந்தச் சரீரம் இறந்தே யொழிந்தது.

(வி - ரை) கிரி - வடசொல்; நிர்க்குணமும் அது, குணராஹித்யம் என்பது பொருள். (கக)

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லா
மாழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.

(ப - ரை) கோழிக் கொடியன்-சேவற்கொடியை யுடையவனாகிய முருகக்கடவுளின், அடி பணியாமல் - திருவடியை வணங்காமல், குவலயத்தே - இவ்வுலகத்தின்கண்ணே, வாழ கருதும்-வாழ நினைக்கிற, மதி இலிகாள் - அறிவிலிகாள்!, உங்கள் வல்வினைநோய்-உமது வல்வினைநோயாகிய, ஊழின் பெருவலி-ஊழினது பெருவலியானது, உண்ணவொட்டாது - அநுபவிக்கவொட்டாது; உங்கள் அத்தம் எல்லாம் - உமது திரவியத்தை யெல்லாம், ஆழ - ஆழமாக, புதைத்து வைத்தால் - புதைத்து வைத்தீர்களானால், நும் அடிப்பிறகே வருமோ-உமது காலின்பின்னே தொடர்ந்துவருமோ.

(வி - ரை) குவலயம்-வடசொல்; இதற்குப் பூமண்டலம் என்பது பொருள்; (கு - பூமி, வலயம்-மண்டலம்). வருமோவென்னு மோகாரம் எதிர்மறை. (உ0)

மரணப்ர மாத மெமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிங் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மாங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான கரசுர பாஸ்கரனே.

(ப - ரை) கிங்கிணி முகுள - கிங்கிணி முகுளித்த, சரணப்ரதாப - சரணப்ரதாபனே!, சசிதேவி - இந்திராணியின், மாங்கல்ய தந்து - மங்கலநாணின், ரக்ஷாபரண-ரக்ஷையைத் தாங்கினவனே!, க்ருபாகர - கருணாகரனே!, ஞானகர - ஞானகரனே!, சுரபாஸ்கரனே-தேவபாஸ்கரனே!, மரண ப்ரமாதம்-மரண மயக்கம், எமக்கு

இல்லையாம் - எங்களுக்கில்லையாம்; என்றும் - எந்நாளும், வாய்த்த துணை-உற்ற துணையாக, கிரணம்-ஒளியுள்ள, கலாபியும் - மயிலும், வேலும் - வேலாயுதமும், உண்டே - உளவே.

(வி - ரை) ப்ரமாதம் - ப்ரமை (மயக்கம்). கலாபம்-தோகை, அதனை யுடையது கலாபி (மயில்). க்ருபாகர - கருணைக்குப்பிறப்பிடமாயிருப்பவனே. ஞாநாகர - ஞானத்துக்குப் பிறப்பிடமாயிருப்பவனே. (உக)

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போல்
கைதா னிருப துடையான் றலைபத்துங் கத்தரிக்க
வெய்தான் மருக னுமையாள் பயந்த விலஞ்சியமே.

(ப - ரை) மொய் - நெருங்கிய, தார் - பூமாலையை யணிந்த, வள்ளியை - வள்ளிநாயகியை, வேட்டவன் - விரும்பினவனே!, முத்தமிழால் - முத்தமிழ்க் கவிகளால், வைதாரையும் - வைதவர்களையும், அங்கு - அப்பொழுதே, வாழவைப்போன் - வாழவைப்பவனே!, வெய்ய வாரணம்போல் - கொடிய யானைபோல, கை இருபது உடையான் - இருபது கைகளையுடையவனாகிய ராவணனது, தலை பத்தும் - பத்துத் தலைகளையும், கத்திரிக்க - அறுக்கும்படி, எய்தான் - அம்பெய்தவனாகிய திருமாலுக்கு, மருகன்-மருகனே!, உமையாள் பயந்த-உமாதேவி யீன்ற, இலஞ்சியமே-களஞ்சியம் போல்பவனாகிய முருகக்கடவுளே!

(வி - ரை) இலஞ்சியம் - நிக்ஷேபம். மொய் என்பதற்கு வண்டுகள் மொய்க்கிற என்றலு மொன்று. வேட்டவன் - வாழவைப்போன். மருகன், இலஞ்சியம் என்பன அண்மைவிளிகள். ()

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனை

னைவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

(ப - ரை) தெய்வம் - தெய்விகமமைந்த, திருமலை-திருமலையாகிய, செங்கோட்டில் வாழும் - திருச்செங்கோட்டில் வாழ்கிற, செழுஞ்சுடரே-செழிய தீபமே!, வை வைத்த-கூர்மையுள்ள, வேற்படை-வேலாயுதத்தையுடைய, வானவனே - தேவனே!, உன்னை நான் மறவேன்-உன்னை நான் மறக்கமாட்டேன்; ஐவர்க்கு இடம் பெற - ஐவருக்கு இடமுண்டாயிருக்க, கால் இரண்டு ஓட்டி - இரு கால்களையும் நட்டு, அதில்-அதன்கண், இரண்டு கை வைத்த வீடு - இரண்டு கையமைத்த வீடு, குலையுமுன்னே - அழியுமுன்னே, வந்து - எழுந்தருளி, காத்தருள் - என்னைக் காத்தருளக்கடவை.

(வி - ரை) செங்கோடு - ஒரு திருத்தலம். சுடரே என்பதற்குச் சூரியனேயென் றுரைத்தலுமாம். ஐவர் என்றது ஐம்பொறிகளை. வீடு என்றது உடம்பைக் குறித்தது. (உ௩)

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே

(ப - ரை) கோடு குழல் சின்னம் குறிக்க - ஊதுகொம்பும் வேய்ங் குழலும் திருச்சின்னமும் ஊத, குறிஞ்சிக்கிழவர் - குறிஞ்சிநிலத்துக் குரியவராகிய குறவரது, சிறுமிதன்னை - புதல்வியாகிய வள்ளிநாயகியை, முன்னம் - முற்காலத்தில், குறிச்சியில் சென்று - குறிஞ்சி நிலத்தூரிற் சென்று, கல்யாணம் முயன்றவனே-விவாகஞ் செய்ய முயன்றவனே!, கின்னம் குறித்து-(என்) துயரத்தை நின் திருவுளத்தடைத்து, (அதை நீக்கும்பொருட்டு) அடியேன் செவி - அடியேன் காதில், கேட்க - கேட்கும்படி, நீ

அன்று சொன்ன - நீ அன்று சொல்லிய, குன்னம் - இரகசியம், குறிச்சி வெளியாக்கிவிட்டது - குறிஞ்சியாகிய இந் நிலத்தில் தன்னை வெளிப்படுத்திவிட்டது.

(வி-ரை) இரகசியம் என்றது மெய்ஞ்ஞான உபதேசம். தன்னைப் பெற்ற என்னையும் மெய்ஞ்ஞானி ஆக்கிவிட்டது என்பது பொருள். வெளியாக்கிவிட்டது என்பதற்கு ஒளியுருவாகச் செய்தது என்னலுமாம். வெளி - ஒளி. (உச)

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

(ப-ரை) செந்தில் - திருச்செந்தூரில் வாழ்கின்ற, வேலனுக்கு - முருகக்கடவுளுக்கு, தொண்டு ஆகிய-அடிமையாகிய, என் - எனது, அவிரோத ஞானம் - அவிரோத ஞானமாகிய, சுடர் வடிவாள் - ஒளியுள்ள வடித்த வாட்படையை, அந்தகா - எமனே!, கண்டாயடா - பார்த்தாயடா!, என் கைக்கு எட்ட - என் கைக்கு எட்டும்படி, சற்று வந்து பார் - கொஞ்சம் வந்து பார்!, (வருவையாயின்) தண்டு ஆயுதமும் - தண்டாயுதமும், திரிசூலமும் - மூத்தலைச் சூலமும், விழ - விழும்படி, உன்னை தாக்கி - உன்னை அடித்து, திண்டாட - விளையாடும்படி, வெட்டி - துண்டித்து, விழ விடுவேன் - விழச் செய்வேன்.

(வி-ரை) வேலவன் - வேற்படையை யுடையவன். அவிரோத ஞானம் - நிருவிகற்ப ஞானம். அந்தகன்-எமன் என்னும் பொருள் குறித்த வடசொல். (உரு)

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன

சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே.

(ப - ரை) நீலச் சிகண்டியில் - நீலநிறமாகிய மயிலின்மீது, ஏறும் பிரான் - ஆரோகணிக்கிற முருகக் கடவுள், எந்த நேரத்திலும் - எப்பொழுதிலும், கோலம் - அழகாகிய, குறத்தியுடன் - குறப் பெண்ணாகிய வள்ளிநாயகியுடன், வருவான் - எழுந்தருளுவான்; குருநாதன் சொன்ன - ஆசாரிய சிரேஷ்டன் சொல்லியருளிய, சீலத்தை - மௌன நிலையை, மெள்ள - பைய, தெளிந்து அறிவார் - தேர்ந்தறிபவராகிய, சிவயோகிகளே - சிவயோகிகள் மாத்திரமே, காலத்தை - கால தத்துவத்தை, வென்றிருப்பார் - ஜெயித்திருப்பார்; வெறும் கர்மிகள்-வீணாகிய கர்மிகள், மரிப்பார்-மரண மடைவார்கள்.

(வி-ரை) சிகண்டி - மயில், இது வடசொல். சீலம் - ஆசாரம் (ஞானாசாரம்). 'காலத்தை வென்றிருப்பார்' என்றது இறக்கமாட்டாரென்றபடி. கர்மிகள்-கர்மாநுஷ்டானிகள். மரித்தல்-இறத்தல்.

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேண்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

(ப-ரை) கந்தவேள் - முருகவேளின், மருங்கில் - அரையிற் கட்டிய, சேலையும்-கச்சையும், கட்டிய சீராவும்-கட்டின கவசமும், கையில் - திருக்கரத்திலுள்ள, சிவந்த - செவந்த, செச்சை மாலையும் - வெட்சி மலர்மாலையும், சேவல் பதாகையும்-கோழிக் கொடியும், தோகையும் - மயிலும், வாகையும்-வெற்றியும், (ஆகிய இவைகள்) ஓலையும் தூதருங் கண்டு - ஓலையும் எமதூதரும் என்னைப் பார்த்து, திண்டாடல் - அச்சுறுத்தலை, ஒழித்து - நீக்கி, காலையும்

மாலையும் - காலைப் பொழுதினும் மாலைப் பொழுதினும், எனக்கு முன் நிற்கும் - எனக் கெதிரே நிற்கும்.

(வி - ரை) ஓலை - எமன் எழுதும் ஓலை. தூதர் - எமதூதர். மருங்கு - இடை. பதாகை - பதாகா என்னும் வடசொற் றிரிபு. தோகை - ஆகுபெயர். (உஎ)

வேலே விளங்குகையான்செய்ய தாளினில் வீழ்ந் திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே.

(ப-ரை) வேலே - வேற்படையே, விளங்கும் - பிரகாசித்துக் கொண்டிருக்கிற, கையான் - திருக்கரத்தையுடையவனது, செய்ய தாளினில் வீழ்ந்து - சிவந்த திருவடியில் விழுந்து, இறைஞ்சி - வணங்கி, மாலே கொள - அன்பே கொள்ளின், இங்ஙன் - இவ்வுலகத்தில், காண்பது அல்லால் - காண்பதல்லாமல், மனம் வாக்கு செயலாலே - மனோ வாக்குக் காயத்தொழிலாலே, அடைதற்கு அரிதாய் - பெறுதற்கு அரியதாகி, அருவுரு ஆகி - அருவமும் உருவமும் ஆகி, ஒன்றுபோலே இருக்கும் பொருளை - ஒன்று போலவே இருக்கின்ற வஸ்துவை, புகல்வது எவ்வாறு-எடுத்துச் சொல்லுவது எவ்விதம்?

(வி-ரை) முருகக்கடவுள் கையில் பிறபடைகள் உளவாயினும் வேற்படையே சிறந்து விளங்குதலால் 'வேலே விளங்கு கையான்' என்றார். செயல் என்றது காயத்தின் தொழிலை. 'அருவுரு வாகி யொன்று, போலே யிருக்கும் பொருள்' என்றது பிரமப்பொருளை. எவ்வாறு என்ற வினா எதிர்மறைப் பொருளில் வந்தது. (உஅ)

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்

படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.

(ப-ரை) சித்ரம் - விசித்திரமாகிய, மாதர்-பெண்களது, அல்குல்-பெண் குறியாகிய, படத்தில் - பாம்பின் படத்திலும், கழுத்தில் - கண்டத்திலும், பழுத்த செவ்வாயில் - முழுச் சிவப்பாகிய அதரத்திலும், பணையில் - கையிலும், உந்தித் தடத்தில் - கொப்பூழாகிய தடாகத்திலும், தனத்தில் - கொங்கையிலும், கிடக்கும் - கிடந்து புரளாநின்ற, வெம் - கொடிய, காம சமுத்திரம் - காமக் கடலை, கடத்தில் - மலைநிலத்திலுள்ள, குறத்தி பிரான் - வள்ளி நாயகிக்குக் கணவனாகிய முருகவேளின், அருளால்-திருவருளினாலுண்டாகிய, கலங்காத - கலக்க மடையாத, சித்தத் திடத்தின் - மனோ தைரியத்தை, புணை என - மரக்கலமாகக் கொண்டு, யான் கடந்தேன் - நான் தாண்டினேன்.

(வி-ரை) கடம் - பாலைநிலம் எனினுமாம். பணை - மூங்கில்; இது ஈண்டு ஆகுபெயராய்த் தோளை யுணர்த்திற்று. (உக)

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற் றமயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

(ப - ரை) பாவையர் - பாவைபோலும் மாதரது, மொழி - சொல், பாலென்பது ஆக - பாலென்று சொல்லப்படும் பொருளாகவும்; பதம் - பாதம், பஞ்சு என்பதாக-பஞ்சென்று சொல்லப்படும் பொருளாகவும்; கண் - கண்கள், சேல் என்பது ஆக - சேல்மீன் என்று சொல்லப்படும் பொருளாகவும், (மயங்கி) திரிகின்ற நீ-அலைவாநின்ற நீ, செந்திலோன்-திருச்செந்தூரில் வாழ்கின்ற முருகக்கடவுளின், திருக்கை-திருக்கரத்திலுள்ள, வேல் என்கிலை-

வேல் என்று சொல்லுகின்றிலை; கொற்றம் மயூரம் என்கிலை - வெற்றியையுடைய மயில் என்று சொல்லுகின்றிலை; வெட்சி - மலர்மாலையை அணிந்த, தண்டைக்கால் என்கிலை - தண்டையை யணிந்த திருவடி என்று சொல்லுகின்றிலை; மனமே - நெஞ்சே!, முத்தி - முத்திப் பேற்றை, காண்பது - நீ அடைவது, எங்ஙன் - எவ்வாறு?

(வி-ரை) பதம் - வடசொல். பாவையர் - பிரதிமைபோன்ற பெண்கள். எங்ஙன் என்ற வினா எதிர்மறையாய்க் காணமாட்டாய் என்னும் பொருள் தந்து நின்றது. (௩௦)

பொக்கக் குடிலிற் புகுதா வகைப்புண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேலொட்ட காவலனே.

(ப-ரை) சிந்து - கடலானது, வெந்து-கொதித்து, கொக்கு-மாமரம், தறிபட்டு - முறிந்து, எறிபட்டு - எறியப்பட்டு, குமுகுமு என-குமுகுமென்று, உதிரம் கக்க - ரக்தத்தை யுமிழ, கிரி உருவ-மலையூடுருவ, கதிர் வேல் தொட்ட-ஒளியுள்ள வேற்படையை யேவின, காவலனே-இறைவனே!, பொக்கம்-பொய்யாகிய, குடிலில்-குடிசையில், புகுதாவகை-இனி யான் புகாவண்ணம், புண்டரீகத்தினும்-செந்தாமரை மலரினும், செக்கச் சிவந்த-மிகச் சிவந்த, கழல்-(உன்) திருவடியாகிய, வீடு-வீட்டினை, தந்தருள்-தந்தருளக்கடவை.

(வி - ரை) புண்டரீகம்-வெண்டாமரை மலர் எனப் பொருள் படுவதோர் வடசொல்; அது ஈண்டைக் கேற்பச் செந்தாமரை மலரைக் குறித்தது. வீடு - க்ருஹம், முத்தி என இருபொருள் தந்து நின்றது. பொக்கக் குடில் என்றது உடம்பை. சிந்து - வடசொல். கிரி - கிரவுஞ்சமலை. (௩௧)

இளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத், துளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை, வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங்கண்ணார்க், கிளைக்குத் தவிக்கின்ற வென்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே.

(ப - ரை) இளைத்து-இளைவிட்டு, புறப்பட்ட-வெளிப்பட்ட, சூர் - சூரபன்மனது, மார்புடன்-நெஞ்சுடனே, கிரி - கிரௌஞ்ச மலையை, ஊடுருவ-ஊடுருவிப்போகும்படி, துளைத்து-துளைத்துக் கொண்டு, புறப்பட்ட-வெளிப்பட்ட, வேல்-வேற்படையையுடைய, கந்தனே-முருகக்கடவுளே!, துறந்தோர்-சந்நியாசியரது, உளத்தை-மனத்தை, வளைத்துப் பிடித்து-வளைத்துப் பற்றி, பதைக்கப் பதைக்க - துடிக்கத் துடிக்க, வதைக்கும் - வதைக்கின்ற, கண்ணார்க்கு - கண்களையுடைய மாதருக்கு, இளைத்துத் தவிக்கின்ற - மெலிந்து தவிக்கின்ற, என்னை - அடியேனை, எந்நாள் - எக்காலம், வந்து இரட்சிப்பை - வந்து காத்தருளுவை.

(வி-ரை) கிரி - வடசொல். 'துறந்தோர் உளத்தை வதைக்கும் கண்ணார்' என்றமையால், இல்லறத்தாரை வருத்துதல் சொல்லாதே யமையும். (௩௨)

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாடிரு நாமம் புகல்பவரே.

(ப - ரை) வெற்றி வேல் பெருமாள் - வெற்றிவேலையுடைய பெருமாள், அடியார்க்கு நல்ல பெருமாள் - தொண்டருக்கு நல்ல பெருமாள், அவுணர் குலம் அடங்க-ராக்ஷஸஸமூகம் அடங்கும்படி, பொடி ஆக்கிய பெருமாள் - தூளாக்கிய பெருமாள், (அவரது)

திருநாமம் - திருநாமத்தை, புகல்பவர் - உச்சரிப்பவர், முடியா - கடக்க முடியாத, பிறவிக்கடலில்-பவசாகரத்தில், புகார் - முழுக மாட்டார்; முழுதும் - எல்லாக் காரியங்களையும், கெடுக்கும்-அழிக்கின்ற, மிடியால் - வறுமையால், படியில் - உலகத்தில், விதனம் படார் - மனம் வருந்தமாட்டார்.

(வி-ரை) பிறவிக்கடலைக் கடத்தல் யாவர்க்கும் அரிதாதலால் 'முடியாப் பிறவிக்கடல்' என்றார். 'பிறவிப் பெருங்கடல்' என்றார் பெருநாவலரும். விதனம் - வ்யஸநம் எனும் வடசொற் றிரிபு. வெற்றி - ஜயம். 'அவுணர் குலம் அடங்க' என்பதற்கு 'ராக்ஷஸ ஸமூக முழுதும்' என்றலுமொன்று. (கூகூ)

பொட்டாக வெற்பைப் பொருதகந் தாதப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே.

(ப-ரை) இரு-பெரிய, காமவிடாய் பட்டார்-காமம் விடாய்ப் பட்டவரது, உயிரை-பிராணனை, திருகி-முறுக்கி, பருகி-குடித்து, பசி தணிக்கும் - தமது பசியைத் தணித்துக்கொள்ளுகின்ற, கட்டாரி வேல் விழியார் - கட்டாரியையும் வேற்படையையும் ஒத்த கண்களையுடைய மாதரது, வலைக்கே - வலையின்கண்ணே, மனம்- என் மனமானது, கட்டுண்டது - கட்டுப்பட்டது; (ஆதலால்) வெற்பை - கிரௌஞ்சமலையை, பொட்டு ஆக - பொடி ஆகும்படி, பொருத-அதனோடு போர் செய்த, கந்தா - கந்தவேளே!, தப்பிப் போனது-என்னைவிட்டு தப்பிப்போனதாகிய, ஒன்றற்கு எட்டாத- ஒன்றுக்கும் எட்டப்படாத, ஞான கலை - ஞானவித்தையை, தருவாய் - தந்தருளக்கடவை.

(வி-ரை) பொட்டு-பொடி. வெற்பு-மலை. பொருதல் - போர் செய்தல். விடாய் - களைப்பு. வலைக்கே - உருபுமயக்கம். (கூச)

பத்தித் துறையிழிந் தானந்த வாரி படிவதினன்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு செங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே.

(ப - ரை) பொங்கு-மிகுதியாகிய, செங்குருதி மெத்தி-சிவந்த உதிரம் பெருகி, குதிகொள்ள-தாவ, வெம் - கொடிய, சூரனை-சூரபன்மனை, விட்ட - எவின, சுட்டியிலே குத்தி - வேலினல் குத்தி, தரம் கொண்டு-சிறப்பைக் கொண்டு; அமராவதி கொண்ட-விண்ணுலகத்தைச் சுவாதீன மாக்கிக்கொண்ட, கொற்றவனே - இறைவனே!, பத்தித்துறை இழிந்து-பத்தியாகிய துறையில் இறங்கி, ஆனந்த வாரி-இன்பக்கடலில், படிவதினல் - மூழ்குவதனல், புத்தி - என் மனத்தின், தரங்கம் - சலனம், தெளிவது என்றோ-தெளிவடைவது எக்காலமோ?

(வி - ரை) துறை-இறங்கு துறை. ஆனந்தவாரி-வடசொல். படிதல்-மூழ்குதல். தரங்கம்-அலை யெனினுமாம். 'வெங்குருதி' என்றும் பாடம். சுட்டி-வேல். தரம்-மேன்மை. அமராவதி-விண்ணுலகம் என்னும் பொருள் தரும் ஒரு வடசொல். (௩௫)

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங், கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக், கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங், கிழித்தோடு வேலென் கிலை யெங்ங னேமுத்தி கிட்டுவதே.

(ப - ரை) நெஞ்சே - மனமே!, சுழித்து ஓடும் - சுழித்துக் கொண்டு ஓடுகின்ற, ஆற்றில்-ஒரு நதியில், பெருக்கானது - வெள்ளம்போன்றது, செல்வம்-செல்வமாகும்; (ஆதலால்) துன்பம் இன்

பம் கழித்து-துன்ப இன்பங்களைத் தாண்டி, ஓடுகின்றது-ஓடுவது, எக்காலம்-எந்தக்காலம்?, கரிக்கோடு-யானைக்கொம்பி லுண்டான, முத்தை - முத்துக்களை, கொழித்து ஓடு - வீசிக்கொண்டு ஓடுகிற, காவிரி - காவேரியாற்றுக்கரையிலுள்ள, செங்கோடன் - திருச்செங்கோடனே!, என்கிலை - என்று உச்சரிக்கவில்லை; குன்றம் எட்டும் - அஷ்டகுல மலைகளையும், கிழித்து - பிளந்துகொண்டு, ஓடு - ஓடுகிற, வேல் என்கிலை - வேற்படையே என்று உச்சரிக்கவில்லை; (இவ்வா றிருக்கும் உனக்கு)முத்தி கிட்டுவது எங்ஙன்" முத்தி கிடைப்பது எவ்வாறு?

(வி - ரை) ஓடுதல் - விரைந்து செல்லுதல். கரி-வடசொல், இதற்குத் துதிக்கையை யுடையது என்பது பொருள். கோடு - கொம்பு. செங்கோடன் - திருச்செங்கோடு என்னும் திருப்பதி யில் எழுந்தருளி யிருப்பவன். (௩௬)

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு டுடுடுடு டுண்டுடுண்டு [தனே.
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்

(ப - ரை) முது - முதிர்ந்த, கூளித்திரள் - பேய்க்கூட்டங்கள், டுண்டுண் டுடுடுடு டுடு டுண்டு டுண்டு டிண்டிண்டு—,என்-என்று, கொட்டி - பறை யடித்துக்கொண்டு, ஆட - கூத்தாட, வெம் - கொடிய, சூர் - சூரபன்மனை, கொன்ற - கொலை செய்த, ராவுத்தனே - சேவகனே!, கண்டுண்ட சொல்லியர் - கற்கண்டைப்போல் இனிக்கும் சொல்லியரான, மெல்லியர் - மாதாது, காமக்கலவி - காமப்புணர்ச்சியாகிய, கள்ளை - மதுவை, மொண்டு உண்டு - மொண்டு குடித்து, அயர்கினும் - மயங்கினாலும், வேல் - உன் வேற்படையை, மறவேன் - யான் மறக்கமாட்டேன்.

(வி - ரை) மெல்லியர் - ம்ருது ஸ்வபாவ முள்ளவர். கலவி - கலத்தல் (புணர்ச்சி). கள் - மது. அயர்தல்-மயங்குதல். ராவுத்தன் என்பதற்கு வீரன் என்றுரைக்கினுமாம். (கஎ)

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

(ப - ரை) குமரேசர் - குமாரக்கடவுளது, இரு தாளும் - இரண்டு திருவடிகளும், சிலம்பும் - சிலம்புகளும், சதங்கையும் - சதங்கைகளும், தண்டையும் - தண்டைகளும், சண்முகமும் - ஆறு முகமும், தோளும் - திருத்தோள்களும், கடம்பும் - கடப்பமலர் மாலையும், எனக்கு முன்னே - எனக்கெதிரில், வந்து தோன்றிடின் - வந்து தரிசனந் தந்துவிட்டால், நாள் - நாட்கள், என் செயும் - என்னை என் செய்யவல்லது?, வினைதான் என் செயும்- வினைதான் என்னை என் செய்யவல்லது?, எனை நாடி வந்த - என்னை நோக்கி வந்த, கோள் என் செயும் - கிரகங்கள் என்னை என் செய்யவல்லது?, கொடும் - கொடிய, கூற்று - எமனனவன், என் செயும் - என்னை என் செய்ய வல்லன் ஆவன்?

(வி - ரை) நாள் - நக்ஷத்திரங்கள். வினை - பூர்வகர்மங்கள். கொடுங் கூற்று என்பதில் கொடுமை கூற்றுவற்குரிய விசேடணம். சிலம்பு சதங்கை தண்டை என்பன காலணிகளின் பெயர்கள். கடம்பு - ஆகுபெயர். (கஅ)

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னிலொன்
விதித்தாண் டருடருங் காலமுண் டோவெற்புநட்டுரக [ரு
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் றிருமரு காமயி லேறிய மாணிக்கமே.

(ப - ரை) வெற்பு - மந்தரமலையை, நட்டு - மத்தாக நட்டு, உரகபதி - வாசுகி என்னும் பாம்பரசாகிய, தாம்பு - வடக்கயிற்ருல், வாங்கி நின்று - வளைத்துக் கட்டி நின்று, அம்பரம்-பாற்கடலானது, பம்பரம்பட்டு உழல - பம்பரம்போல் சுழல, மதித்தான் - கடைந்தவனுகிய திருமாலின், திரு மருகா - அழகிய மருகனே!, மயில் எறிய - மயிலின்மீது ஆரோகணித்த, மாணிக்கமே—, உதித்து - பிறந்து, ஆங்கு - அவ்வாறே, உழல்வதும் - அலைவதும், சாவதும் - இறப்பதும், தீர்த்து - ஒழித்து, என்னை - அடியேனை, உன்னில்-உன்னிடத்தில், ஒன்று ஆ-ஒரு பொருளாக, விதித்து - நியமித்து, ஆண்டு - ஆட்கொண்டு, அருள் தரும் - அருள் செய்கின்ற, காலம் - ஒருகாலம், உண்டோ - நேருமோ.

(வி - ரை) உதித்தல் - பிறத்தல். சாதல் - இறத்தல். தீர்த்தல் - ஒழித்தல். ஒன்ரு என்றது ஓரணிகலனுக எனறபடி. விதித்தல் - நியமித்தல். வெற்பு - மலை, அது ஈண்டைக் கேற்ப மந்தர மலையை உணர்த்திற்று. உரகம் - பாம்பு. பதி - அரசு (பாம்பரசு), அது ஈண்டைக் கேற்ப பாம்பரசாகிய வாசுகியைக் குறித்தது. வாங்கல் - வளைத்தல். மதித்தல் - கடைதல். (௩௧)

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழி றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தன வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

(ப - ரை) செந்தூர் - திருச்செந்தூரின், வயல் - வயல்கள், சேல் பட்டு-சேல்மீன்கள் குதித்துலாவி, அழிந்தது-அழிந்துபோயிற்று; பூங்கொடியார் மனம் - பூங்கொடிபோல்வாராகிய மாதரது மனமானது, பொழில்-சோலையிலுள்ள, தேம்-மணத்தையுடைய, கடம்பின் - கடப்பமலர்மாலையின், மால் பட்டு - ஆசை மிகுந்து, அழிந்தது - அழிந்துபோயிற்று; வேலையும் - கடலும், சூரனும் -

சூரபன்மனும், வெற்பும்-கிரௌஞ்சமலையும், மா மயிலோன் - அழகிய மயில்வாகனத்தையுடைய முருகக்கடவுளது, வேல் பட்டு அழிந்தன - வேல் பட்டதனால் அழிந்துபோயின; அவன் - அம் முருகக் கடவுளின், கால் பட்டு - திருவடி பட்டதனால், இங்கு-இவ் வுலகத்தில், என் தலை மேல் - என் சிரசின்மீது எழுதப்பட்டிருக்கிற, அயன் - பிரமனது, கையெழுத்து - கையெழுத்தானது, அழிந்தது - அழிந்துபோயிற்று.

(வி-ரை) கடம்பு - ஆகுபெயர். மால் - ஆசை. வேலை-வேலா என்னும் வடசொற்றிரிபு. அயன்-அஜ: என்னும் வடசொற் றிரிபு. அயன் கையெழுத்து என்றதை ப்ரம்மலிபி என்பர் வடநூலரர். ()

பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாட்ருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.

(ப-ரை) காலே - காற்றையே, மிக உண்டு-மிகவுங் குடித்து, காலே இல்லாத-கால்களே இல்லாத, கணம்-கூட்டமாகிய, பணத்தின் மேலே - ஆதிசேஷனாகிய பாம்பின் படத்தின்மீது, துயில் கொள்ளும் - அறிதுயில் செய்கின்ற, மாலோன் - திருமாலுக்கு, மருக-மருகனே!, செவவேலவனே-சிவந்த வேற்படையையுடையவனே!, பாலே அனைய-பாலையே நிகர்த்த, மொழியார் - சொல்லையுடைய மாதரது, இன்பத்தைப் பற்றி-சுகத்தைக் குறித்து, என்றும்-எந்நாளும், மாலே கொண்டு-மயக்கத்தையே கொண்டவனாய், உய்யும் வகை - பிழைக்கும் விதத்தை, அறியேன்-அறிகிலேன்.

(வி-ரை) பாலே என்னு மேகாரம் பிரிநிலை. மொழியார்தம் என்றதில் தம் சாரியை. மால்-காம மயக்கம். உய்தல்-கடைத்தேறு

தல். மலர்த்தாள் - செந்தாமரை மலர்போலுந் திருவடி. கால் - காற்று. கணம்-வடசொல், (கூட்டம்). பணம்-வடசொல், (படம்).

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொருவீடெய்தி நிற்கநிற்கு
குணங்காட்டி யாண்ட குருதேசிகனங் குறச்சிறுமான் [ங்
பணங்காட்டு மல்குற் குருகுங்குமரன்பதாம்புயத்தை [வே.
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்தது

(ப - ரை) நிணம் காட்டும் - நிணத்தைப் புலப்படுத்துகிற, கொட்டிலை விட்டு - தோழத்தை விட்டு, ஒரு - ஒப்பற்ற, வீடு - முத்தியை, எய்திநிற்க-அடைந்திருத்தற்கு, நிற்கும்-இருக்கவேண்டிய, குணம் காட்டி - குணத்தைப் புலப்படுத்தி, ஆண்ட - என்னை யாட்கொண்ட, குருதேசிகன் - குருநாதன், அம் - அழகிய, குறச் சிறுமான் - சிறிய குறப்பெண்ணின், பணம் காட்டும் அல்குற்கு - பாம்பின் படம் போலும் அல்குலின் பொருட்டு, உருகும் - மனங் கரைகின்ற, குமரன் - முருகவேளின், பத அம்புயத்தை - பாத தாமரைமலரை, வணங்கா - பணியாத, தலை - சிரசாகிய, இது - இவ்வுறுப்பு, எங்கே வந்து - எவ்வாறு வந்து, எனக்கு - எனக்கு, இங்ஙன் வாய்த்தது - இங்கே கிடைத்தது?

(வி-ரை) நிணம்-கொழுப்பு. கொட்டில் என்றது உடம்பை. குணம் - ஞானகுணம். (சஉ)

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்[ன்பாற்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப் போற்றிய
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்கன் கூடியவே.

(ப - ரை) கவியால் - வானரங்களைக் கொண்டு, கடல் அடைத்தோன்-கடலில் அணை கோலியவனது, மருகோனை - முருகக்கடவுளை, கண பணம்-கூட்டமாகிய படங்களையுடைய, கட்செவியால்-

பாம்பை, பணி-ஆபரணமாக, அணி - அணிந்த, கோமான் - சிவ பெருமானுக்கு, மகனை - குமாரனை, திறல்-வலிமை பொருந்திய, அரக்கர்-ராக்ஷஸரது, புவி-பட்டணம், ஆர்ப்பு எழ-ஆரவாரம் மிகும் படி, தொட்ட-எவின, போர் வேல்-போர்க்குரிய வேற்படையை யுடைய, முருகனை - குமாரக் கடவுளை, அன்பால் போற்றி - அன் போடு வணங்கி, குவியா - கூம்பாத, கரங்கள் - கைகள், எனக்கு - அடியேனுக்கு, வந்து எங்கே-வந்து எவ்வாறு, இங்ஙன் - இவ்விட த்து, கூடிய-பொருந்தின?

(வி-ரை) கவி - வானரம், இது ஈண்டைக்கேற்ப சுக்கிரீபன் முதலிய வானரங்களைக் குறித்தது. கட்செவி-கண்ணை செவியாக வுடையது (பாம்பு). பணி-ஆபரணம் (குண்டலம்). ஆர்ப்பு-அழும் ஓசை. குவியா - அஞ்சலிக்காத. (சஙு)

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு வேய்ந்த வகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே.

(ப - ரை) தோலால் சுவர் வைத்து - தோலினாலே சுவர் எழுப்பி, நாலாறு காலில் சுமத்தி - பத்துக்காலின்மேல் சுமத்தி, இரு காலால் எழுப்பி - இரண்டு காலால் மேலே தூக்கி, வளை - வளைந்த, முதுகு ஓட்டி - முகடு வேய்ந்து, கை நாற்றி - கைகள் தொங்கவிட்டு, நரம்பால் - நரம்புகளைக்கொண்டு, ஆர்க்கை இட்டு - கட்டி, தசைகொண்டு வேய்ந்த - மாமிசத்தைக் கொண்டு மூடின, அகம் - வீட்டை, பிரிந்தால்-நீங்கினால், வேலால்-வேற்படையினால், கிரி துளைத்தோன்-கிரௌஞ்ச மலையைத் துளைத்தவனாகிய முருக வேளினது, இருதாள் அன்றி - இரண்டு திருவடி அல்லாமல், வேறு இல்லை - நமக்குப் புகலிடம் வேறொன் றில்லை.

(வி - ரை) கால்-கற்று. நாலாறு கால் என்றது தசவாயுவை. இருகால் என்றது இரண்டு பாதங்களை. முதுகு-முதுகு. நாற்றுதல்-தொங்கவிடுதல். ஆர்க்கை - கட்டுதல். அகம் என்றது ஈண்டைக்கேற்ப உடம்பைக் குறித்தது. (சச)

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டுரே சூர குலாந்தகனே.

(ப-ரை) இரு கோடு-இரண்டு கொம்பினையும், ஒரு கை-ஒரு துதிக்கையினையும் உடைய, பொரு - போர் செய்கின்ற, பூதரம் - மலையை, உரித்து-உரித்து, ஏகாசம் இட்ட-உத்தரீயமாய்ப் போட்டுக்கொண்ட, புராந்தகற்கு - சிவபெருமானுக்கு, குரு-ஆசாரியனாகிய, பூதம் - பரிசுத்தமான, வேலவன்-வேற்படையையுடையவன், நிட்டூரன் - கொடியனாகிய, சூரன்-சூரபன்மனது, குலம்-சந்ததிக்கு, அந்தகன்-எமனாய் இருந்தவன், ஒரு பூதரும் அறியா-ஒரு பூத உடம்பினரும் அறியாத, தனி - ஒப்பற்ற, வீட்டில் - வீட்டின்கண், உரை உணர்வு அற்று - சொல்லும் நினைப்பும் ஒழிந்து, பூத வீட்டில் இராமல் - பஞ்சபூதாற்பகமாகிய இந்த உடம்பில் இருக்காமல், இரு என்றான்-நிச்சலமாய் இருக்கக்கடவை என்று அருளிச்செய்தான்.

(வி - ரை) பூதர் - பஞ்சபூதங்களாலாகிய சரீரத்தை யுடையவர். வீடு - என்றது முத்தியை. பூதவீடு என்றது உடம்பு. பொருதல் - போர் செய்தல். பூதரம் - மலை; இது 'இருகோட்டு ஒருகை பொரு' என்ற விசேஷணத்தால் யானையை உணர்த்திற்று. புராந்தகன் - முப்புரத்தை நாசஞ் செய்தவன் (சிவபெருமான்). பூதம் - வடசொல், பரிசுத்தம் என்னும் பொருளது. (சரு)

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மனோதுக்க மானது மாய்வதற்கே.

(ப - ரை) சேயான - குழந்தை வடிவான, வேல் - வேற்படையையுடைய, கந்தனே—, செந்திலாய் - திருச்செந்தூரில் எழுந்தருளி யிருப்பவனே!, சித்ரம் - வியப்பைத் தருகிற, மாதர் - பெண்களது, அல்குல்-அல்குற்றடத்தில், தோயா - மூழ்கி, உருகி- மனங் கரைந்து, பருகி - சுகித்து, பெருகி - இந்தத் தொழிலை மேலிட்டு, துவளும்-துவளுகின்ற, இந்த மாயா விநோதம் - இந்த மாயையாகிய விளையாட்டினால் உண்டாகிய, மனோதுக்கமானது - மனத் துன்பமானது, மாய்வதற்கு-கெடும்பொருட்டு, நீ ஆன-நீயே யாகிய, ஞானவிநோதம்தன்னை-ஞானலீலையை, என்று-எக்காலத்தில், நீ அருள்வாய் - நீ அருள் செய்வையோ (அறியேன்).

(வி - ரை) தோயா - செய்யாவென்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். பருகல்-அநுபவித்தல். மாய்தல்-அழிதல். ()

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.

(ப-ரை) செயல் மாண்டு-தொழில் அற்று, அடங்க-ஒடுங்கும்படி, புத்திக் கமலத்து - மனத்தாமரையில், உருகி - கரைந்து, பெருகி-பெருக்கமடைந்து, புவனம் எற்றி-எல்லா வுலகங்களையும் இடறி, தத்தி - குதித்து, கரை புரளும் - கரைமீது புரளாநின்ற, பரமானந்த சாகரத்து - மேலாகிய இன்பக்கடலில், பத்தி வரிசையாகிய, திருமுகம் ஆறுடன் - ஆறு திருமுகங்களோடு, பன்னிரு

தோள்களும் ஆய் - பன்னிரண்டு புயங்களை உடையதுமாய், தித்தித்து இருக்கும்-இனித்திருக்கின்ற, அமுது - அமிர்தத்தை, கண்டேன் - கண்டுகொண்டேன்.

(வி-ரை) பத்தி - பங்தி என்னும் வடசொற் றிரிபு. அமுது - அம்ருதம் என்னும் வடசொற் றிரிபு. அமுது கண்டேன் என்றதற்கேற்ப ஆனந்த சாகரம் என்றது இன்ப உருவான பாற்கடல் என்று உரைத்துக்கொள்க. (சஎ)

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க வறிகின் றிலேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

(ப - ரை) புத்தியை - என் மனத்தை, வாங்கி - வளைத்துப் பிடித்து, நின் பாதாம்புயத்தில்-உன் பாத தாமரை மலரில், அன்பாய் புகட்டி - அன்போடு சமர்ப்பித்து, (அதற்கு ஈடாக) முத்தியை - முத்திச் செல்வத்தை, வாங்க - பெற்றுக்கொள்ள, அறிகின்றிலேன் - அறியும் ஆற்றல் இல்லேன்; முது-பழைமையாகிய சூர்-சூரபன்மன், நடுங்க - நடுங்கும்படி, சத்தியை - வாளை, வாங்க - வாங்குதற்கு, தரமோ - என் வசமோ; குவடு - கிரௌஞ்ச மலையானது, தவிடுபட-பொடியாக, குத்திய-குத்தின, காங்கேயனே - கங்கா புத்ரனே!, வினையேன் கு - வினையேனுக்கு, என் - யாது செய்ய, குறித்தனை-நினைத்திருக்கிறாய்?

(வி-ரை) பாதாம்புயம் - வடசொல். சத்தி - ஶக்தி என்னும் வடசொற் றிரிபு. காங்கேயன் - வடசொற் றிரிபு. குறித்தல் - நினைத்தல். (சஅ)

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் றொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்டண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

(ப - ரை) தண்டு - சேனையுடன், தாவடி போய்-போர்க்குச் சென்று, தேரில் - தேரின்மீதும், கரியில்-யானையின்மீதும், பரியில் - குதிரையின்மீதும், (ஏறி) திரிபவர் - திரிகின்றவரது, செல்வம் எல்லாம்-ஐஸ்வரிய முழுதும், நீரில் பொறி என்று-நீர்மே லெழுதின எழுத்தென்று, அறியாத - உணராத, நெடு - பெரிய, பாவி நெஞ்சமே - பாவி மனமே!, சூரில்-சூரபன்மன்மேலும், கிரியில் - கிரௌஞ்ச மலையின்மீதும், கதிர்வேல்-ஒளியையுடைய வேலாயுதத்தை, எறிந்தவன்-ஏவினவனாகிய முருகக்கடவுளின், தொண்டர் குழாம்-அடியார் கூட்டத்தை, சாரின்-சேர்ந்தால், (அந்தச் சார்பு) கதி அன்றி-நமக்குக் கதியல்லாமல், வேறு இல்லை-வேறொன்றில்லை.

(வி - ரை) தாவடி - போர். பொறி-எழுத்து, (பொறித்தல்-எழுதுதல்). (சக)

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

(ப - ரை) பெரு - பெரிய, பாம்பில் - காளிங்கனென்னும் சர்ப்பத்தின்மீது, நின்று நடிக்கும்-நின்று நடனஞ்செய்த, பிரான்-திருமாலின், மருகா - மருகனே!, கொடுஞ்சூரன்-கொடிய சூரபன்மன், நடுங்க - நடுங்கும்படி, வெற்பை-கிரௌஞ்ச மலையை, இடிக்கும் - தகர்த்த, கலாபம் - தோகையையுடைய, தனி - ஒப்பற்ற,

மயில் - மயில் வாகனத்தின்மேல், ஏறும்-ஏறின, இராவுத்தனே - சேகவனே!, படிக்கும்-யாவரும் படித்தற்குரிய, திருப்புகழ் - உன் திருப்புகழை, போற்றுவன் - பாராட்டுவேன்; கூற்றுவன் - எமனுனவன், பாசத்தினால்-பாசத்தைக்கொண்டு, பிடிக்கும்பொழுது- என்னைப் பற்றுங் காலத்தில், வந்து - எனக்கெதிரே எழுந்தருளி, அஞ்சல் - அஞ்சாதே, என்பாய் - என்று அருள்செய்யக்கடவை.

(வி-ரை) படித்தல்-பாராயணஞ் செய்தல். நின்று நடிக்கும் பிரான் மருகா என மேல் வருதலால் பெரும்பாம்பு என்றது காளிங்கனென்னும் சர்ப்பத்தை. (௩௦)

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

(ப - ரை) (உலகத்தீரே!) நும்மை - உங்களை, நேடி வரும்- தேடி வருகிற, தொலையா வழிக்கு-தொலையாத வழிக்கு, பொதி சோறும் - கட்டமுதும், உற்ற துணையும் - உற்ற துணையுமாகும்; (ஆதலால் நீங்கள்) ஏற்றவர்க்கு - உம்மிடத்து வந்து இரந்தவர்க்கு, இலையாயினும் - இலையேயாயினும், வெந்தது ஏதாயினும்-வெந்த தெதுவாயினும், பகிர்ந்து - பகிர்ந்திட்டு, மலை - கிரௌஞ்ச மலையானது, ஆறு கூறு எழ - ஆறு பங்காய்ப் பிளந்தெழும்படி, வேல் வாங்கினானை - வேலெடுத்தவனை, அன்பின் - அன்புடனே, வணங்கி - பணிந்து, நிலையான - நிலைபெற்ற, மாதவம் - பெரிய தவத்தை, செய்குமின் - செய்யுங்கள்.

(வி - ரை) நேடல் - தேடுதல். தொலையா வழி யென்றது யமபுரஞ் செல்லு மார்க்கம். உற்ற துணை - நற்றுணை. இலை-இலைக் கறி (கீரை). பகிர்தல் - பங்கிடுதல். (௩௧)

சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே.

(ப - ரை) பணி பாச சங்க்ராமம்-போர் செய்தற்குரிய கயிற்றை நிகர்த்த பாம்பின், பணாமகுடம் - பணாமகுடங்களை, நிகராட் சம - பொடியாக்குதற்குரிய, பட்ச - சிறகுகளையுடைய, பட்சி துரங்க - மயிலை வாகனமாகவுடையவனே!, ந்ருப - அரசனே!, குமரா-குமரனே!, குக - குகனே!, ராட்சச பட்ச விட்சோப - அரக்கர் பக்கத்தில் வெறுப்புள்ளவனே!, தீர - தைரியவானே!, குண துங்கனே - சுகுணனே!, சிகரம் - சிகரங்களையுடைய, அத்ரி - கிரவுஞ்சமலையை, கூறு இட்ட - பிளந்த, வேலும் - வேற்படையையும், செஞ்சேவலும் - செவந்த சேவலையும், செந்தமிழால் - செந்தமிழ்க் கவியால், பகர் - துதித்தற்குரிய, ஆர்வம் - அன்பை, ஈ - எனக்கு அருள் செய்யக்கடவை.

(வி - ரை) துரங்கம் - குதிரை, அது இங்குப் பாசரத்துக் காயிற்று. (௩௨)

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப்புதைத்துத்திருட்டிற்கொடுத்துத்திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

(ப - ரை) வேடிச்சி - குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியின், கொங்கை - தனத்தை, விரும்பும் - இச்சித்த, குமரனை - குமரவேளை, மெய் அன்பினால் - மெய்யன்புடனே, பாடி - பாடி, கசிந்து - மனமுருகி, உள்ளபோதே - கைப்பொருளுள்ளகாலத்திலேயே, கொடாதவர் - (ஏற்றவர்க்குக்) கொடுக்காதவர், பாதகத்

தால் - பாவவழியால், தேடி - சம்பாதித்து, புதைத்து-மண்ணில் புதைத்து, திருட்டில் கொடுத்து - கள்வர்க்குக் கொடுத்து, திகைத்து இளைத்து - பிரமித்து மெலிந்து, வாடி - வாட்டமடைந்து, கிலேசித்து - துக்கித்து, வாழ்நாளை - தமது ஆயுளை, வீணுக்கு மாய்ப்பவரே - வீணில் இழந்துபோவோரேயாவர்.

(வி - ரை) பாதகம் - பாவம். (ருந)

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கட றீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

(ப - ரை) இலங்காபுரிக்கு-லங்கா நகரத்துக்கு, போகைக்கு-போவதற்கு, நீவழிகாட்டு என்றுபோய்-நீவழிகாட்டக்கடவையென்றுபோய், கடல் தீ கொளுந்த - கடலில் நெருப்புப்பற்றி யெரியும்படி, வாகை - வெற்றியையுடைய, சிலை வளைத்தோன்-வில் வளைத்தவனாகிய திருமாலுக்கு, மருகா - மருகனே!, மயில்வாகனனே-மயில்வாகன முடையவனே!, சாகைக்கும்-இறப்பதற்கும், மீண்டு பிறக்கைக்கும் அன்றி - மீட்டும் பிறப்பதற்குமேயன்றி, தளர்ந்தவர்க்கு-வறிஞருக்கு, ஒன்று ஈகைக்கு - ஒருபொருளைக் கொடுப்பதற்கு, என்னை விதித்தாயில்லையே - என்னை நியமித்தாயில்லையே.

(வி - ரை) சாகை-சாதல். வறிஞரைத் 'தளர்ந்தவர்' என்றார் அவரினும் தளர்வார் உலகி லொருவரு மின்மையால். வழிகாட்டுகின்றது சமுத்திரராஜனை. வாகநம் - வடசொல்; இதற்குத் தாங்குவது (சுமப்பது) என்பது பொருள். (ருச)

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்

ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார்தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே.

(ப - ரை) ஆங்காரமும் அடங்கார் - அஹங்காரக்குணத்திற் குறையார்; பரமானந்தத்தே ஒடுங்கார்-பேரின்பத்தி லொடுங்கார்; தேங்கார்-நிறைவுறார்; நினைப்பும் மறப்பும் அறார்-நினைப்பு மறப்புக் களை ஒழியார்; தினைப்போதளவும் - தினைப்பொழுதளவாயினும், ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே - ஓங்காரத்தின் உள்ளொளிக் குள்ளே, முருகன் - குமாரக்கடவுளின், உருவம் கண்டு-ரூபத்தைக் கண்டு, தூங்கார் - நித்திரை செய்யார்; தொழும்பு செய்யார் - தொண்டு செய்யார்; யம தூதருக்கு - யம தூதருக்கு, என் செய்வார் - (இவர்) யாது செய்யக்கடவர்?

(வி - ரை) ஓங்காரம் - பிரணவம். (ருரு)

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

(ப - ரை) அடல் - வலிமையுள்ள, குன்று-கிரவுஞ்சமலையானது, கிழியும்படி - பிளக்கும்படி, எறிந்தோன் - வேலெறிந்தவனாகிய குமரவேளின், கவி - பாடலை, கேட்டு உருகி-கேட்டு மனமுருகி, இழியும் - அத்துறையிற்றானே யிறங்குகிற, கவி - பாடல்களை, கற்றிடாது இருப்பீர்-கற்காதிருப்பவர்களே!, எரிவாய் நரகக் குழியும் - எரிவாய் நரகக் கிணறும், துயரும் - துன்பமும், விடாய் பட-இளைப்புண்டாம்படி, கூற்றுவன் ஊர்க்கு செல்லும் வழியும் - யமனூர்க்குப் போம் வழியும், துயரும் - துக்கமும், மறந்தவர்க்கு-மறந்திருக்கும் அறிவிலிகளுக்கு, பகரீர் பகரீர் - சொல்லுங்கள் சொல்லுங்கள்.

(வி - ரை) எரிவாய் நரகக்குழி யென்றது நெருப்புருவா யிருப்பதோர் நரககூபம். பகர்தல் - சொல்லல். (௫௬)

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

(ப-ரை) (உலகத்தீரே!) வினையோம் இறந்தால் - வினையேமிறந்தொழிந்தால், மாய உடம்பு இது-மாயச்சரீரமாகிய இது, ஒரு பிடி சாம்பரும் காணாது-ஒரு பிடி யளவு சாம்பரும் ஆகாது; (ஆதலால், நீங்கள்) பொரு-போர் செய்கிற, பிடியும் - பெண் யானையும், களிறும்-ஆண்யானையும், விளையாடும்-விளையாடுதற்குரிய, புனம் - புனத்தில், சிறுமான் தரு - சிறுமானீன்ற, பிடி-பெண் யானைக்கு, காவல - தலைவனே!, சண்முகவா - ஆறுமுகனே!, என - என்று, சாற்றி - உச்சரித்து, நித்தம் - நாள்தோறும், இருபிடி சோறு கொண்டு இட்டு - இரண்டு பிடியளவு சோற்றை யிரப்பவர்க்குக் கொடுத்து, உண்டு - நீங்களும் உண்டு, இரும் - இருங்கள்.

(வி-ரை) பிடி-பெண்யானை. களிறு - ஆண்யானை. சிறுமான் தருபிடி யென்றது வள்ளிநாயகியை. சாம்பர் - சாம்பல். ()

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேலும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் றேவேந்த்ர லோக சிகாமணியே.

(ப-ரை) நெற்றா - முதிராத, பசும் கதிர்-பசுமையாகிய கதிர்களையுடைய, செவ்வேனல்-செவந்த தினைப்புனத்தை, காக்கின்ற-காவல் செய்கிற, நீல வள்ளி - நீல நிறமுள்ள வள்ளிநாயகியின், முற்றா - முதிராத, தனத்திற்கு - கொங்கைக்கு, இனிய பிரான் -

இனிய தலைவன் யாவனென்றால், இக்கு-கரும்பு வில்லானது, முல்லையுடன் - முல்லைமலரம்புடனே, பற்று - அதைப் பிடித்திருந்த, ஆக்கையும் வெந்து - சரீரமும் வெந்து, சங்ராமம் - போர் செய்ய வந்த மன்மதனும், பட - அழியும்படி, விழியால் - கண்ணினால், செற்றார்க்கு - வென்றவராகிய சிவபெருமானார்க்கு, இனியவன் - இனியவனும், தேவேந்த்ரலோக சிகாமணியே-விண்ணுலக சிகாமணியுமாகிய முருகவேளே.

(வி - ரை) நெற்று-முதிர்ந்த கதிர். ஏனல் - தினை. இக்கு - இக்ஷு என்னும் வடசொற் றிரிபு. விழி - நெற்றிக்கண். (௫அ)

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.

(ப - ரை) கெடுவீர்-துஷ்டர்களே!, பொங்கு - பொங்குகிற, ஆரம்-முத்துகளைக் கொழிக்கிற, வேலையில் - கடலின்மீது, வேலை விட்டோன் - வேற்படையை யேவினவனாகிய முருகக்கடவுளின், அருள்போல - திருவருள்போல, ஏற்பவர்க்கு இட்டது - இரப்பவர்க்குக் கொடுத்தது, உதவ - உதவும்படி, எங்கு ஆயினும் வரும் - எவ்விடத்திலாயினும் வரும்; இடாமல் வைத்த-கொடாமல் வைத்திருந்த, வங்காரமும் - பொன்னும், உங்கள்-உம்முடைய, சிங்கார வீடும் - அழகாகிய வீடும், மடந்தையரும் - மாதரும், உயிர் போம்-உயிர் போகிற, அ - அந்த, தனி வழிக்கு - ஒன்றாகிய மார்க்கத்துக்கு, சங்காதமோ - உதவியாமோ.

(வி - ரை) வேலை - வேலா என்னும் வடசொற் றிரிபு. வங்காரம் - திசைச்சொல், (வங்காரம் - தெலுங்கு). மடந்தையர் என்றது பருவங் குறியாது பெண் பொதுவைக் குறித்தது. (௫௯)

சிந்திக்கி லேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேயொன் றும் வாழ்த்துகிலேன்மயில்வாகனனைச்
சந்திக்கிலேன்பொய்யைநிந்திக்கிலேனுண்மைசாதிக்கிலேன்
புந்திக்கி லேசமுங் காயக்கி லேசமும் போக்குதற்கே.

(ப - ரை) புந்தி கிலேசமும் - மனோதுக்கத்தையும், காய கிலேசமும் - சரீரதுக்கத்தையும், போக்குதற்கு - ஒழித்தற்கு, மயில்வாகனனை - முருகக்கடவுளை, சிந்திக்கிலேன்-நினைக்கிலேன்; நின்று சேவிக்கிலேன் - நின்று சேவித்திலேன்; தண்டை - தண்டை யணிந்த, சிற்றடியை-சிறிய திருவடியை, வந்திக்கிலேன் - துதிக்கிலேன்; ஒன்றும்-சிறிதும், வாழ்த்துகிலேன்-புகழ்கிலேன்; சந்திக்கிலேன் - கண்டிலேன்; பொய்யை நிந்திக்கிலேன் - பொய்யைப் பழித்திலேன்; உண்மை சாதிக்கிலேன் - மெய்யைப் பற்றிலேன்.

(வி - ரை) சேவித்தல்-தரிசித்தல். சாதித்தல்-உறுதியாகப் பற்றுதல். கிலேசம் - க்லேஶம் என்னும் வடசொற் றிரிபு. (௬௦)

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவாபஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

(ப - ரை) பஞ்சபூதமும் அற்று - ஐம்பூதமும் அற்று, உரை அற்று - சொல்லற்று, உணர்வு அற்று - உணர்ச்சியற்று, உடல் அற்று - உடம்பற்று, உயிர் அற்று - சீவனற்று, உபாயம் அற்று - தந்திரம் அற்று, கரை அற்று - எல்லையற்று, இருள் அற்று - அந்தகாரம் அற்று, எனது அற்று-மமகாரம் அற்று, இருக்கும்-இருக்கிற, அ - அந்த, காட்சியது - அறிவுருவாகிய பொருளை, வரை அற்று-கிரவுஞ்சமலை பிளந்து, அவுணர் சிரம் அற்று - அரக்கரது தலைக

ளறுந்து, வாரிதி வற்ற - கடல் சுவறும்படி, செற்ற - கோவித்த, புரை அற்ற-குற்றமற்ற, வேலவன் - வேலாயுதன், போதித்தவா- உபதேசித்தவாறு என்ன வியப்பு.

(வி - ரை) வாரிதி - வடசொல் (கடல்). செறல் - வேறல் எனினுமாம். காட்சி - அறிவு (ஞானம்). (சுக)

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகில முண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூர னு மேருவுமே.

(ப - ரை) ஆலுக்கு - சிவபெருமானுக்கு, அணிகலம் - ஆபரணமாயிருப்பது, வெள் தலை மாலை - வெண்டலை மாலையாம்; அகிலம் உண்ட - உலகத்தை விழுங்கின, மாலுக்கு-திருமாலுக்கு, அணிகலம் - ஆபரணமாயிருப்பது, தண்ணந்துழாய் - குளிர்ந்த துளவமாலையாம்; மயில் ஏறும் ஐயன்-முருகக்கடவுளது, காலுக்கு- திருவடிக்கு, அணிகலம் - ஆபரணமாயிருப்பது, வானோர் முடியும்- தேவர் சிரங்களும், கடம்பும் - கடப்பமலர்மாலையுமாம்; கையில் - அவனது திருக்கரத்திலுள்ள, வேலுக்கு-வேலாயுதத்துக்கு, அணி கலம் - ஆபரணமாயிருப்பது, வேலையும் - கடலும், சூரனும் - சூரபன்மனும், மேருவும் - மேருமலையுமாம்.

(வி-ரை) ஆலன் - (ஆலம்-விஷம்); இது, விஷபானம் பண்ணினவனை யுணர்த்திற்று. ஆலமரத்தின்கீழ் எழுந்தருளியிருந்து சநகாதியர்க்கு உபதேசித்தவனாதலால் இப் பெயருண்டாயிற்றென்றலு மொன்று. ஆலனுக்கு எனற்பாலது ஆலுக்கு என விகாரமாயிற்று. (சுஉ)

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்தநாதனைப்போர்வேலனைச்சென்றுபோற்றியுய்யச்

சோதித்த மெய்யன்பு பொய்யோ வழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

(ப-ரை) பாதி திருவுரு - பாதித் திருமேனி, பச்சென்றவர்க்கு - பச்சென்றிருப்பவர்க்கு, தன் பாவனையை - தன் மனோ பாவத்தை, போதித்த நாதனை - உபதேசித்த குருநாதனை, போர் வேலனை - போர்வேலவனை, சென்று போற்றி உய்ய - போய் வணங்கி யீடேற, சோதித்த - சோதனை செய்த, மெய் அன்பு - உண்மை யன்பு, பொய்யோ - பொய்யாகுமோ!, அழுது தொழுது உருகி - அழுது வணங்கி உருகி, சாதித்த புத்தி - சாதித்த அறிவானது, வந்து - வந்து, எங்கே - எவ்வாறு, எனக்கு - எனக்கு, இங்ஙன் சந்தித்தது - இங்கு நேர்ந்தது?

(வி-ரை) உமாதேவி பங்கன் என்றற்குப் 'பாதித் திருவுருப் பச்சென்றவர்' என்றார். "பச்சைப் பசுங்கொடி யுண்ணு முலைப் பங்கர்" என்றார் பெரியாரும். உருகுதல் - மனங் கரைதல். (௬௩)

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவி டேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாடிருமுன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

(ப-ரை) பட்டி கடாவில் - திருட்டெருமைக்கடாவின்மேலேறி, வரும் - வருகிற, அந்தகா - யமனே!, உன்னை - உன்னை, பார் அறிய-உலகறிய, வெட்டி-துண்டித்து, புறம் கண்டு அலாது-புறங்கண்டல்லாமல், விடேன்-விடமாட்டேன்; வெய்ய-கொடிய, சூரனை - சூரபன்மனை, போய் முட்டி - போய்த் தாக்கி, பொருத-போர் செய்த, செவ்வேல்-செவந்த வேற்படையையுடைய, பெருமான் - பெருமானது, திருமுன்பு நின்றேன் - சந்நிதிக்கெதிரே நின்றேன்; கட்டி - உன் விருதுகள் யாவையும் கட்டிக்கொண்டு,

புறப்படடார்-வெளிப்படடார்!, சத்தி வாள்-சத்தி வாளானது, என் கையது - என் கைக்கண்ணது.

(வி - ரை) புறங்காண்டல் - தோற்றோடுவோரது முதுகு காண்டல். சத்திவாள் - உமாதேவியாற் றரப்பட்ட வாட்படை. ()

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே.

(ப - ரை) கர அசலங்கள் எட்டும் - கைம்மலைகள் எட்டும், குலகிரி எட்டும் - குலகிரிக ளெட்டையும், விட்டு ஓட - விட்டு ஓடும்படி, எட்டாத-எட்டப்படாத, வெளிமட்டும் புதைய - ஆகாசம் வரைக்கும் மறைய, விரிக்கும் - விரிக்கிற, கலாபம் - தோகையையுடைய, மயூரத்தனே-மயில்வாகனனே!, வெட்டும்-வெட்டுகிற, கடாமிசை - எருமைக்கடாவின் மீதேறி, தோன்றும் - வருகிற, வெம் கூற்றன் - கொடிய யமனானவன், விடும் - வீசுகிற, கயிற்றால் - பாசத்தினால், கட்டும்பொழுது - பிணிக்கும்போது, விடுவிக்கவேண்டும் - மீட்கவேண்டும்.

(வி - ரை) கைம்மலை-துதிக்கையையுடைய மலை (யானை). கராசலங்க ளெட்டும் என்றது அஷ்டதிக்கஜங்களைக் குறித்தது. புதைதல் - மறைதல். கலாபம், மயூரம் என்பன வடசொற்கள். ()

நீர்க்கு மிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கு மாற்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே.

(ப - ரை) யாக்கை - உடம்பானது, நீர்க்குமிழிக்கு நிகர்-நீர் மொக்குளுக்குச் சமானம், என்பர் - என்று சொல்லுவர்; செல்வம்-ஐசுவரியம், நில்லாது - நிலைத்திராது; பார்க்குமிடத்து - நோக்குமிடத்தில், அந்த மின்போலும் என்பர் - அந்த மின்னலை நிகர்க்குமென்று சொல்லுவர்; பசித்து வந்து - பசிகொண்டு வந்து, ஏற்குமவர்க்கு - இரப்பவர்க்கு, இட என்னின் - இடவேண்டுமென்றால், எங்கு எனும் எழுந்திருப்பார் - எங்கேயாயினும் போய்விட எழுந்திருப்பார்; வேல் - வேற்படையையுடைய குமரற்கு, அன்பு இல்லாதவர் - அன்பில்லாதவரது, ஞானம் - அறிவு, மிகவும் நன்று - மிகவும் நன்றாயிருக்கிறது.

(வி - ரை) ஏற்றல் - யாசித்தல். (சுசு)

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

(ப - ரை) மத கும்பம்-மதநீர் ஒழுகுகின்ற கும்பஸ்தலத்தையுடைய, கம்பம் - கட்டுத்தறியிற் கட்டப்படுகிற, தறுகண்-அஞ்சாமையையும், சிறு கண் - சிறு கண்களையுமுடைய, சங்க்ராம - போர்வீரனே!, சயிலம்-மலைநாடியாகிய, சரச வல்லி-வள்ளிநாயகி, இறுக தழுவும்-இறுக அணைக்கிற, கடக அசல - கடகமணிந்த மலைகள் போன்ற, பன்னிரு புயனே - பன்னிரு தோளனே!, பெறுதற்கு அரிய - பெறுதற்கரிதாகிய, பிறவியை - மானுடப் பிறவியை, பெற்றும் - பெற்றிருந்தும், நின் - உனது, சிற்றடியை - சீறடியை, குறுகி பணிந்து - அடைந்து வணங்கி, பெற - பிறவிப் பயனை யடைய, கற்றிலேன் - கற்றேனில்லை.

(வி - ரை) குறுகி - கிட்டி யெனினுமாம். தறுகண்மை-அஞ்சாமை. சங்க்ராமம் - வடசொல். சயிலம் - ஶைலம் என்னும் வடசொற் றிரிபு. கடகாசலம் - கடகமணிந்த மலை (புயம்). (௬௭)

சாடுஞ் சமரத் தனிவேன் முருகன் சரணத்திலே
ஓடுங்கருத்தையிருத்தவல்லார்க்குகம்போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே.

(ப - ரை) சாடும் - பகைவரைக் கொல்லுகிற, சமரம்-போர் செய்தற்குரிய, தனி-ஒப்பற்ற, வேல்-வேற்படையையுடைய, முருகன் - முருகக்கடவுளின், சரணத்திலே - திருவடியிலே, ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு-ஓடு மியல்புள்ள மனத்தை நிறுத்த வல்லவர்க்கு, உகம் போய் - யுகங்கள் கழிந்து, சகம் போய் - உலகங்க ளழிந்து, பாடும்-பக்கத்திலும், கவுரி - உமாதேவி, பவுரிகொண்டு ஆட - பவுரிக்கூத்தாட, பசுபதி - சிவபிரான், நின்று ஆடும் பொழுது - நின்று கூத்தாடுங் காலத்தில், அதீதத்திலே - அதீத பாவனையில், பரமாயிருக்கும் - மேலானதாயிருக்கும்.

(வி-ரை) சாடல் - கொல்லுதல். சாமரம்-வடசொல். பவுரி - ஓர்வகைக் கூத்து. பசுபதி-வடசொல். அதீதம்-வடசொல், அழுந்தல் என்னும் பொருளது. (௬௮)

தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய லாஞ்சத்தி வாளொன்றி
சிந்தத்துணிப்பன்றணிப்பருங்கோபத்ரிசூலத்தையே. [றாற்

(ப-ரை) முன்னம்-முற்காலத்தில், தந்தைக்கு - தன் தந்தையாகிய சிவபெருமானுக்கு, தனி - ஒப்பற்ற, ஞானவாள் ஒன்று -

ஒரு ஞானவாட்படையை, சாதித்தருள் - சாதித்தருளின, கந்தச் சுவாமி - முருகக்கடவுள், என்னை தேற்றிய பின்னர் - என்னைத் தெளிவித்த பிறகு, காலன்-யமனானவன், வெம்பி - வந்து கோவித்து வந்து, இப்பொழுது-இப்பொழுது, என்னை என் செயலாம் - என்னை யாது செய்யலாம்?, சத்திவாள் ஒன்றினால் - சத்திவாள் ஒன்றினாலேயே, சிந்த - சிதறும்படி, தணிப்பு அரு - தணித்தற்கரிய, கோபம் - கோவத்தையுடைய, த்ரிசூலத்தை - முத்தலைச் சூலத்தை, துணிப்பன் - சேதித்துவிடுவேன்.

(வி-ரை) ஞானவாள் என்றது ஓங்காரார்த்தத்தை. வெம்புதல்-கோவித்தல்; பகுதி வெம்பு. என்செயலாம் என்றது ஒன்றுஞ் செய்ய முடியாதென்றபடி. (சுகூ)

விழிக்குத் துணை திருமென்மலர்ப்பாதங்கண் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

(ப-ரை) விழிக்கு - கண்களுக்கு, துணை-துணையாவது, திரு மெல் மலர் பாதங்கள்-அழகாகிய மெல்லிய தாமரை மலர்போலுந் திருவடிகள்; மெய்மை குன்றா மொழிக்கு-உண்மையாகிய சொல்லுக்கு, துணை - துணையாவது, முருகா என்னும் நாமங்கள்-முருகா என்கிற திருநாமங்கள்; முன்பு செய்த - முற்பிறப்பிற் செய்த, பழிக்கு - பாவத்துக்கு, துணை - துணையாவது, அவன் - அவனது, பன்னிரு தோளும் - பன்னிரண்டு புயங்களும், பயந்த - அஞ்சின, தனி வழிக்கு-தனி வழிக்கு, துணை-துணையாவது, செங்கோடன்-திருச்செங்கோட்டி லெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளின், வடிவேலும் - வடித்த வேலாயுதமும், மயூரமுமே - மயிலுமேயாம்.

(வி-ரை) மயூரம்-மயில் என்னும் பொருள் தருவதோர் வடசொல்.

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமெனுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

(ப-ரை) துருத்தி எனும்படி-துருத்தி என்று சொல்லும்படி, கும்பித்து - கும்பகம் செய்து, வாயுவை-காற்றை, சுற்றி-சுழற்றி, முறித்து - ஒடித்து, உடம்பை அருத்தி - உடம்பை உண்பித்து, ஒறுக்கில் - வருத்தினாலும், என் ஆம்-என்ன பயனுண்டாம்?, சிவ யோகம் என்னும் - சிவயோகம் என்கிற, குருத்தை அறிந்து-மூல த்தை அறிந்து, ஆறுமுகம் உடை - ஆறுமுகங்களையுடைய, குரு நாதன் - குருராயன், சொன்ன - சொல்லிய, கருத்தை - அபிப்பி ராயத்தை, மனத்தில் - உங்கள் நெஞ்சில், இருத்தும் - இருத்துங் கள்; முத்தி - மோக்ஷம், கைகண்டது - கைகண்ட பயனும்.

(வி-ரை) கண்டீர்-முன்னிலை அசையிடைச்சொல். கும்பித் தல் - போக்குவரவு இல்லாமல் தடுத்தல். ஒறுத்தல்-வருத்துதல். ()

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ் சுடர்வேல், வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விள ங்குவள்ளி, காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகன னைச், சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லை யே.

(ப-ரை) சேந்தனை - செந்நிறத்தை யுடையவனை, கந்தனை - கந்தவேளை, செங்கேட்டு வெற்பனை-திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளி இருப்பவனை, செஞ்சுடர் - செவ்வொளியையுடைய, வேல் - வேற்படையை ஏந்திய, வேந்தனை - அரசனை, செந்தமிழ் நூல் - செந்தமிழ்ப்பாஷையை, விரித்தோனை-பரவச்செய்தவனை, விளங்கு - பிரகாசிக்கின்ற, வள்ளி காந்தனை - வள்ளியம்மைக்கு

நாயகனை, கந்தம் - மணமுள்ள, கடம்பனை - கடப்பமலர் மாலையை அணிந்தவனை, கார் மயில் வாகனனை-கறுத்த மயில் வாகனத்தை உடையவனை, சாந்துணைப்போதும் - இறக்கும் தருணத்திலாயி லும், மறவாதவர்க்கு - மறவாதிருப்பவர்க்கு, ஒரு தாழ்வும் இல்லை- ஒரு குறையும் இல்லை.

(வி-ரை) வெற்பு-மலை. நூல் என்றது பாவைதயை. காந்தன்- வடசொல். துணை - எல்லை, அளவு. (எஉ)

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த வானந்தமே.

(ப-ரை) அறுமுகவா-சண்முகனே!, போக்கும் வரவும்-போத லும் வருதலும், இரவும் பகலும் - இராக்காலமும் பகற்காலமும், புறம்பும் உள்ளும் - வெளியும் உள்ளும், வாக்கும் - சொல்லும், வடிவும் - உருவும், முடிவும் - இறுதியும், இல்லாதது ஒன்று - இல்லாததாகிய ஒரு பொருள், வந்து வந்து தாக்கும் - வந்து வந்து சந்திக்கின்றது; (அன்றியும்) தானே மனோலயம் தரும் தானே - மனோலயத்தையும் தருகின்றது; என்னை - அடியேனை, தன் வச த்தே ஆக்கும் - தன் வசப்படுத்திக்கொள்ளும், இந்த ஆனந்தம் - இந்த ஆனந்தம், சொல் ஒண்ணாது - சொல்ல முடியாது.

(வி-ரை) இல்லாதவொன்று என்பாலது இல்லாவொன்று என விகாரமாயிற்று. மனோலயம் - மனவொடுக்கம். ஆநந்தம் - வடசொல், இன்பமென்பது பொருள். (எ௩)

ஆராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த
வன்பாற், குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுவ்

கொடியவைவர், பராக்கறல் வேண்டு மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால், இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே.

"(ப - ரை) அரா - பாம்பை, புனை - தரித்த, வேணியன் - சடாபாரத்தையுடைய சிவபெருமானது, சேய் - புதல்வனாகிய முருகவேளின், அருள் வேண்டும் - திருவருள் வேண்டும்; அவிழ்ந்த அன்பால் - விரிந்த அன்பினால், குரா புனை - குராமாலையை அணிந்த, தண்டையந்தாள் - தண்டை யணிந்த திருவடியை, தொழல் வேண்டும் - வணங்கவேண்டும்; கொடிய ஐவர் - கொடியோராகிய ஐவரது, பராக்கு - பராமுகம், அறல் வேண்டும் - ஒழியவேண்டும்; மனமும்-உள்ளமும், பதைப்பு அறல் வேண்டும்- அசைவறல் வேண்டும், என்றால் - என்னுமிடத்து, இராப்பகல் அற்ற - இரவும் பகலும் இல்லாத, இடத்தே-இடத்தில், இருக்கை- இருத்தல், எளிது அல்ல - எளிதான காரியம் அல்ல.

(வி - ரை) புனைதல் - தரித்தல். அவிழ்ந்த அன்பு - மிக்க அன்பு எனினுமாம். குரா - ஆகுபெயர். ஐவர் என்றது ஐம்பொறிகள்; அவையாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. பதைப்பு - சலனம். இராப்பகல் அற்ற இடம் - பிரமநிலை. (எச)

படிக்கின் றிலைபழ னித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

(ப-ரை) நெஞ்சமே - மனமே!, பழனி - முருகக்கடவுளின், திருநாமம் - திருநாமங்களை, படிக்கின்றிலை-பாராயணம் செய்கின்றிலை; படிப்பவர் - பாராயணஞ் செய்கின்றவரது, தாள் முடிக்கின்றிலை - திருவடியைச் சிரசா வகிக்கின்றிலை; முருகா என்கிலை,

முருகக்கடவுளே என்கின்றிலை; முசியாமல் - (பசியால்) மெலி யாமல், இட்டு - ஏற்போர்க்குக் கொடுத்து, மிடிக்கின்றிலை.- நீ மிடியன் ஆகின்றிலை; பரமானந்தம் - பேரின்பம், மேற்கொள - அதிகரிக்க, விம்மி விம்மி - அழுதழுது, நடிக்கின்றிலை-கூத்தாடு கின்றிலை; நமக்கு - எமக்கு, இனி - இனி, தஞ்சம் ஏது - பற்றுக் கோடாவது யாது?

(வி - ரை) பழனி - ஆகுபெயர். முசிதல் - இளைத்தல் அல் லது மெலிதல். மிடித்தல் - வறியனாதல். 'தஞ்சம் ஏது?' என்கிற வினா 'தஞ்சம் இல்லை' என்னும் பொருள் தந்து நின்றது. (எரு)

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் றணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

(ப - ரை) குன்று எறிந்த தாட்டாளனே - கிரௌஞ்சமலை யைப் பிளந்த மகாவீரனே!, தென் தணிகைக் குமர - தென் தணி கையில் வாழ்கின்ற குமரவேளே!, நின்-உனது, தண்டையந்தாள் - தண்டை அணிந்த திருவடியை, சூடாத சென்னியும் - தரிக்காத சிரசும், நாடாத கண்ணும் - தரிசிக்காத கண்களும், தொழாத கையும் - வணங்காத கைகளும், பாடாத நாவும் - புகழாத நாவும், எனக்கே - எனக்கென்றே, தெரிந்து-ஆராய்ந்து, படைத்தனன் - சிருஷ்டித்தான்; கோடாத - நியாயத்தில் பிசகாத, வேதனுக்கு- பிரமனுக்கு, யான் செய்த - நான் செய்த, குற்றம் - அபராதம், என் - யாது?

(வி - ரை) கோடுதல் - கோணுதல். வேதன் - வேதாதி காரியாகிய பிரமன். எறிந்த என்னும் வினை மேல் வருதலால்

குன்று என்பது கிரௌஞ்சமலையைக் குறித்தது. நாடுதல்-நோக்குதல். தெரிதல் - ஆராய்தல். (எசு)

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரவெண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழ னோக்குநெஞ்சே.

(ப - ரை) நெஞ்சே - மனமே! சேல் வாங்கு கண்ணியர் - சேல்மீனை வெல்லுகின்ற கண்களையுடைய மாதரது, வண்ணம் - அழகாகிய, பயோதரம் - ஸ்தனங்களை, சேர - தழுவ, எண்ணி - நினைத்து, மால் வாங்கி - ஆசை கொண்டு, ஏங்கி - ஏக்கமுற்று, மயங்காமல் - மயக்கம் அடையாமல், வெள்ளி மலை என-வெள்ளி மலைபோல, கால் வாங்கி நிற்கும் - காலூன்றி நிற்கின்ற, களிற்றான் - வெள்ளையானையை யுடையவனாகிய இந்திரனது, கிழத்தி - மனைவியாகிய இந்திராணியின், கழுத்தில் கட்டும் - கழுத்தில் பூட்டின, நூல் - மங்கல சூத்திரத்தை, வாங்கிடாது - அறுத்துவிடாமல், அன்று - அக்காலத்தில், வேல் வாங்கி - வேலெடுத்த குமாரக்கடவுளின், பூங்கழல் - தாமரை மலர்போன்ற திருவடியை, நோக்கு - தரிசிப்பாயாக.

(வி - ரை) பயோதரம்-வடசொல். வெள்ளிமலையென கால் வாங்கி நிற்கும் களிறு என்றது இந்திரனது வெள்ளையானையாகிய ஐராவதத்தை. கிழத்தி-மனையறத்துக் குரியவள். கிழமை-உரிமை. கழுத்திற் கட்டும் நூல் என்றது திருமாங்கல்யக் கயிற்றை. வேல் வாங்கி என்பதன் ஈற்றிலுள்ள இகரம் வினைமுதற்பொருண்மை விகுதி. (எஎ)

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண்
டார்விர்காள், போர்கொண்ட கால னுமைக்கொண்டு போ

மன்று பூண்பனவுந், தார்கொண்ட மாதரு மாளிகை யும்
பணச் சாளிகையும், ஆர்கொண்டு போவரை யோகெடு வீர்
நும் மறிவின்மையே.

(ப-ரை) கூர் கொண்ட-கூர்மையைக் கொண்ட, வேலனை-வேற்படையைக் கொண்ட குமாரக்கடவுளை, போற்றாமல்-வணங்காமல், ஏற்றம் - உங்கள் பெருமையை, கொண்டாடுவீர்காள் - கொண்டாடுகின்றவர்களே!, போர் கொண்ட-போர்த்தொழிலைத் தனக்குரிமையாகக் கொண்ட, காலன் - கூற்றுவன், உம்மை-உங்களை, கொண்டு போம் அன்று - கொண்டுபோகின்ற அந்நாளில், பூண்பனவும் - அணிவனவாகிய ஆபரணங்களும், தார் கொண்ட மாதரும் - பூமாலைகளை யணிந்த பெண்களும், மாளிகையும்-மாளிகைகளும், பணச்சாளிகையும்-பணப்பையும், ஆர் கொண்டுபோவர்-எவர் எடுத்துக்கொண்டு போவார்களோ?, ஐயோ-அந்தோ!, கெடுவீர் - கெடுவீர்காள், நும் - உமது, அறிவின்மையே-அறிவின்மை இருந்தவாறு என்னே.

(வி-ரை) ஈற்றேகாரம் இரக்கத்தின்கண் வந்தது. (எஅ)

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேன்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா விளங்கும ராவம ராவதி காவலனே.

(ப-ரை) பந்து ஆடும் - பந்து ஆடுகிற, மங்கையர்-மாதர்து, செம் கயல்-சிவந்த சேல்மீன் போன்ற, பார்வையில் பட்டு - கண் வலையில் சிக்கி, உழலும் - திரிகின்ற, சிந்தா ஆகுலந்தன்னை - மனோதுக்கத்தை, தீர்த்து அருள்வாய்-நீக்கி அருள்செய்யக்கடவை; செய்ய-சிவந்த, வேல்-வேற்படையைத் தாங்கிய, முருகா-முருகக் கடவுளே!, கொந்து ஆர் - பூங்கொத்துக்கள் நிறைந்த, கடம்பு -

கடப்பமரங்கள், புடை சூழ்-பக்கங்களிற் சூழ்ந்திருக்கின்ற, திருத்தணிக் குன்றில்-திருத்தணிகை மலையில், நிற்கும்-நிலைபெற்றிருக்கிற, கந்தா-கந்தனே!, இளம் குமரா-இளங்குமரனே!, அமராவதி காவலனே - அமராவதி நகரத்தைக் காக்கும் தொழிலில் வல்லவனே!.

(வி-ரை) சிந்தா, ஆகுலம், அமராவதி என்பன வடசொற்கள். அமராவதி - இந்திரலோகம். (எகூ)

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைத்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.

(ப-ரை) சுத்தம் - பரிசுத்தத்தையும், நித்தம்-அழியாமையையும், முத்தி த்யாகம்-மோக்ஷத்யாகத்தையும் உடைய, பொருப்பை-மலையை, த்ரிபுராந்தகனை-முப்புரத்தை அழித்தவனை, த்ரியம்பகனை-மூன்று கண்களையுடையவனை, பாகத்தில்-தன் பங்கில், வைக்கும் - அமைத்துக்கொண்டிருக்கிற, பரம கல்யாணி - உமாதேவியின், பாலகனே - புதல்வனே!, மாகத்தை முட்டி-ஆகாயத்தை முட்டி, வரும் - வருகின்ற, நெடும் கூற்றன் - நெடிய எமனானவன், வந்தால் - வருவானாயின், என் முன்னே - எனக்கெதிரே, தோகைப் புரவியில்-மயில் வாகனத்தின்மீதேறி, தோன்றி நிற்பாய் - பிரத்யக்ஷமாக நிற்கக்கடவை.

(வி-ரை) மாகம்-ஆகாசம். தோகை-கலாபம்; இது ஆகுபெயராய் மயிலை உணர்த்திற்று. த்யாகம் - கொடை, இது வடசொல். த்ரிபுராந்தகன் என்பதுமது. அந்தகன் - நாசகன். த்ரியம்பகன் - முக்கண்ணன், வடசொல். பாகம்-வடசொல். அம்பகம்-கண். பரம கல்யாணி - மேலான மங்களகரத்தை யுடையவள். (அ0)

தாரா கணமெனுந் தாய்மா ரறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே.

(ப-ரை) அந்தகா - எமனே!, தாராகணம் என்னும்-நக்ஷத்திரக் கூட்டமென்கிற, தாய்மார் அறுவர்-ஆறு தாய்மார்கள், தரும் - தந்த, முலைப்பால் - முலைப்பாலை, ஆராது - உண்ணுமல், உமை - உமாதேவியின், முலைப்பால்-முலைப்பாலை, உண்ட-உண்டருளின, பாலன் - பாலனுகிய முருகக்கடவுளின், அரையில் கட்டும் - திருவரையிற் கட்டின, சீராவும் - தட்டியும், கையில் - கையிற் பிடித்த, சிறு வாளும் - சிறிய வாளாயுதமும், வேலும்-வேலாயுதமும், என் சிந்தைய - என் மனத்தினிடத்தவா விருக்கின்றன; (ஆதலால்) வாராது - என்னை நோக்கி வாரமல், அகல் - நீங்கிப்போ!, வந்த போது - வந்தபொழுது, உயிர் வாங்குவன் - உன் உயிரைக் கவர்ந்துவிடுவேன்.

(வி-ரை) தாராகணம் - வடசொல். தாய்மார் அறுவர் என்றது கார்த்திகைப்பெண்களை. ஆர்தல்-உண்ணுதல் (குடித்தல்). ()

தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணிந்தரு ளாய்புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே.

(ப-ரை) புண்டரீகன் - பிரமனது, அண்டமுகட்டைப் பிளந்து - அண்டமுகட்டைப் பிளந்து, வளர்ந்து - பெருகி, இந்த்ர லோகத்தை முட்ட - சுவர்க்கலோகத்தை முட்டும்படி, எட்டி - எட்டி, பகட்டின் - தன் பெருமையினுல், பொருதிட்ட - போர் செய்த, நிட்டூர - நிஷ்டூரனுகிய, சூரன் - சூரபன்மனுக்கு, பயங்

கரனே - அச்சத்தை யுண்டாக்கினவனே!, தகட்டின் - தகட்டு வடிவாயுள்ள, சிவந்த - செவந்த, கடம்பையும் - கடப்பமலர் மாலையையும், நெஞ்சையும் - என் மனத்தையும், தாள் இணைக்கே-உன் திருவடி இணைக்கே, புகட்டி - சூட்டி, பணிய - வணங்கும்படி, பணித்தருள் - நியமித்தருளவேண்டும்.

(வி-ரை) கடம்பை - ஆகுபெயர். பணித்தருளல் - கட்டளையிட்டருளல். புண்டரீகன் அண்டமுகடு - பிரம்மாண்ட கடாகம். பகடு - பெருமை. (அஉ)

தேங்கிய வண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் றளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

(ப-ரை) சிற்றடிக்கே - தன் சிறிய திருவடியில், பூங்கழல் கட்டும் - அழகிய கழலை அணிந்த, பெருமாள் - பெருமான், தேங்கிய-நிறைந்த, அண்டத்து - விண்ணுலகத்திலுள்ள, இமையோர்-தேவர்களுடைய, சிறை விட - சிறை மீட்க, கலாபம் புரவிமிசை தாங்கி-மயில்வாகனத்தின்மீது ஏறப்பெற்று, நடப்ப - நடத்தலும், சூரன் தளம் - சூரபன்மனது சேனையானது, முறிந்தது-முறிபட்டது; தனி-ஒப்பற்ற, வேல் - வேலாயுதத்தை, வாங்கி அனுப்பிட-நியமித்து ஏவ, குன்றங்கள் எட்டும் - அஷ்ட குலாசலங்களும், வழிவிட்ட - விலகி வழிவிட்டன.

(வி-ரை) கலாபம் - ஆகுபெயர். தளம் - சேனை. (அந)

ஐவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும்போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

(ப - ரை) மைவரும் கண்டத்தர்-நீலகண்டத்தையுடைய சிவ பெருமானார்க்கு, மைந்த - புதல்வனே!, கந்தா - கந்தவேளே!, வாழ்த்தும் - என்று வாழ்த்துகின்ற, இந்த - இந்த, கைவரும் - எனக்குப் பழக்கமாகிய, தொண்டு அன்றி - அடிமைத்தொழில் அல்லாமல், மற்று அறியேன் - வேறொன்றையும் அறியமாட்டேன்; கற்ற கல்வியும் போய் - கற்ற வித்தையும் போய், பை வரும் கேளும் - பசுமையாய் வந்து சுற்றுகின்ற சுற்றத்தாரும், பதியும் - வாழ்ந்த ஊராரும், கதற - அலறும்படி, பழகி நிற்கும் - பழகி நிற்கிற, ஐவரும் - ஐம்பொறிகளும், கை விட்டு - கைநழுவவிட்டு, மெய் விடும்போது - நானும் இச் சரீரத்தை விட்டுவிடும்போது, உன் அடைக்கலம் - நான் உன் அடைக்கலந்தான் வேறு பற்றில்லை.

(வி - ரை) மை - கருநிறம். கேள்-சுற்றம். பதி-ஆகுபெயர் மெய் - பொய்யாகிய உடலை மெய்யென்றது மங்கலவழக்கு. (அச)

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுத மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

(ப - ரை) விழி-கண்களை, நாசி வைத்து-நாசிநுனியில் வைத்து, மூட்டி - மூள்வித்து, கபாலம் - கபாலமும், மூலாதாரம்-மூலாதாரமும், நேர் அண்ட - எதிரிட, மூச்சை - சுவாசத்தை, உள்ளே ஓட்டி-உள்ளே யோடுவித்து, பிடித்து - பற்றி, எங்கும் ஓடாமல் - எவ்விடத்தும் ஓடவொட்டாமல், சாதிக்கும் - சாதிக்கிற, யோகிகளே - யோகீச்சுரர்களே!, காட்டில் - காட்டில் வாழ்கிற, குறத்தி பிரான்-குறத்திக்குக் கணவனாகிய முருகவேளின், பதத்தே-திருவடியின்கண்ணே, கருத்தை புகட்டின் - மனத்தை யிருத்தினால், வீட்டில் புகுதல் - முத்தியுலகிற் பிரவேசித்தல், மிக எளிதே - மிகவும் எளிதான காரியமே.

(வி - ரை) யோகிகளே! நீங்கள் எளிதிற் பெறுதற்குரிய பெரும் பயனை விட்டு, வீணை கஷ்டசாத்தியமான காரியத்தை மேற்கொண்டது உங்கள் அறிவின்மையா மென்பது இச் செய்யுட் கருத்து. இச் செய்யுளிற் பொதிந்துள்ள செய்தி குருமுகத்தி லறி யத்தக்கதாதலால் ஈண்டு விரித்திலம். (அ௫)

வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன்றந்த கந்த சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

(ப - ரை) வேலாயுதன் - வேற்படையையுடையவன், சங்கு சக்ராயுதன் - திருமால், விரிஞ்சன் - பிரமன், அறியா - அறிய வொண்ணாத, சூலாயுதன் - சிவபெருமான், தந்த - பெற்ற, கந்த சுவாமி - கந்தசுவாமி, சுடர் - ஒளியுள்ள, குடுமி - உச்சிக்கொண் டையையுடைய, காலாயுதக் கொடியோன்-கோழிக்கொடியோன், (அவனது) அருள் ஆய - திருவருளாகிய, கவசம் உண்டு - கவச மிருக்கின்றது; என்பால் - எனனிடத்தில், ஆயுதம் வருமோ - ஆயுதம் வருமோ, (நான்) யமனோடு பகைக்கினும் - யமனுடனே பகை கொண்டாலும்.

(வி - ரை) காலாயுதம் - சேவல்; இது காலில் முள்ளுடைய தாதலால் இதற்கு இப் பெய ருண்டாயிற்று. (அ௬)

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமா டிருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

(ப - ரை) குமரா - குமரவேளே!, சரணம் சரணம் என்று - அடைக்கலம் அடைக்கலம் என்று, அண்டர் குழாம் - தேவர் கூட்

டம், துதிக்கும் - தோத்திரம் பண்ணுகிற, அமராவதியின் பெருமாள் - அமராவதியிலுள்ள பெருமானது, திருமுகம் ஆறும் - ஆறு திருமுகங்களையும், கண்ட - தரிசித்த, தமர் ஆகி வைகும் - அன்பராயிருக்கிற, தனியான - ஒப்பற்ற, ஞான தபோதனர்க்கு - ஞானத்தையுடைய தவச்செல்வர்க்கு, இங்கு - இவ் வுலகில், எமராசன் விட்ட - எமராஜன் அனுப்பின, கடை ஏடு வந்து - கடைநாளோலை வந்து, இனி என் செய்யும் - இனி யாது செய்யும்?

(வி - ரை) தமர் - அன்பர். தபோதனர் - தவமாகிய செல்வத்தை யுடையவர். கடையேடு - கடை நாளில் அனுப்பும் ஓலை. ()

வணங்கித் துதிக்க வறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகை கொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயு தந்தொட்ட நிர்மலனே.

(ப - ரை) கொடியும் - காகமும், கழுகும் - கழுகுகளும், பிணங்க - ஒன்றோடொன்று பிணங்காநிற்க, அலகை - பேய்கள், துணங்கை கொண்டாட - துணக்கைக் கூத்தாட, பிசிதர்-அரக்கர், வாய் நிணம் கக்க - தம் வாயின் வழியாய் நிணத்தை உமிழாநிற்க, விக்ரமம் - வெற்றியுள்ள, வேலாயுதம் தொட்ட - வேற்படையையேவின, நிர்மலனே-பரிசுத்தனே!, வணங்கி-தொழுது, துதிக்க-உன்னைத் தோத்திரம் பண்ண, அறியா - அறியாத, மனிதருடன் இணங்கி - மனிதரோடு கூடி, குணம் கெட்ட - குணமழிந்த, துட்டனை - துஷ்டனாகிய என்னை, ஈடேற்றுவாய் - ஈடேற்றியருள வேண்டும்.

(வி - ரை) இணங்கல்-கூடுதல். விக்ரமம் - வெற்றி. துணங்கை - இருகையு முடக்கி பழுப்புடை யொத்தியாடல். (அஅ)

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே.

(ப-ரை) தனி வேல் எடுத்து-ஒப்பற்ற வேற்படையை யெடுத்து, பொங்கு - பொங்குகிற, ஓதம் - கடலானது, வாய்விட - வாய்திறந்தலற, பொன்னம் சிலம்பு புலம்ப-கிரவுஞ்சமலை புலம்ப, வரும் - வருகிற, எம் கோன் - எம்மிறைவன், அறியின் - அறிவனாயின், இனி நான்முகனுக்கு இரு விலங்கு - இனி பிரமனுக்கு இரட்டை விலங்குதான்; (ஆதலால்) பங்கேருகன் - பிரமன், என்னை-என்னை, பட்டு ஓலையில் இட-தன் பட்டோலையி லெழுத, பண்டு - முற்காலத்தில், தம் காலில்-தன் காலில், தளை இட்டது - விலங்கு பூட்டினதை, அறிந்திலனோ-உணர்ந்திலனோ?

(வி - ரை) பங்கேருகம் - வடசொல்; இதற்குத் தாமரைமலரில் வீற்றிருப்பவன் என்பது பொருள். பட்டோலை - விதியேடு. தளை - விலங்கு. (அக)

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

(ப - ரை) மாலோன் மருகனை - திருமாலுக்கு மருகனை, மன்று ஆடி மைந்தனை-சிவகுமாரனை, வானவர்க்கும்-தேவர்களுக்கும், மேலான தேவனை - மேலான தேவனை, மெய்ஞ்ஞான தெய்வத்தை - மெய்ஞ்ஞான தேவதையை, மேதினியில் - உலகத்தில், சேல் ஆர் - சேல் மீன்கள் நிறைந்த, வயல் - வயல்களுடன், பொழில் - சோலைகளும் சூழ்ந்த, செங்கோடனை திருச்செங்கோ

டனை, சென்று கண்டு தொழ-போய்க் கண்டு வணங்க, அந்த நான்முகன்-அந்தப் பிரமன், நாலாயிரம் கண் படைத்திலனே-நாலாயிரம் கண்களைப் படைத்தானில்லையே.

(வி - ரை) மன்ருடி-பொன்னம்பலத்தில் நடிப்பவன். நான்முகன் - சதுர்முகன். (௯௰)

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமாவினைச்செற்ற போர்வேலனைக் கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

(ப - ரை) கருமால் மருகனை - கரிய மாலுக்கு மருகனை, செம்மான் மகளை - வள்ளிநாயகியை, களவு கொண்டு வரும் - களவில் எடுத்துக்கொண்டு வந்த, ஆகுலவனை - வேடனை, சேவல் கைக்கோளனை - சேவலைக் கைக்கொண்டிருப்பவனை, வானம் உய்ய - விண்ணுலகத்தார் பிழைக்கும்படி, பொரும் - போர்செய்ய வந்த, மாவினை செற்ற - மாமரத்தைப் பிளந்த, போர் வேலனை - முருகவேலனை, கன்னி - இளமையாகிய, பூகமுடன்-கமுகமரங்களோடு, தரு-கற்பகதருவானது, மா மருவு-அழகாகச் சேர்கின்ற, செங்கோடனை - திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருப்பவனை, வாழ்த்துகை - வாழ்த்துதல், சால நன்று - மிகவும் நன்று.

(வி - ரை) ஆகுலவன், கைக்கோளன் என்பன சாதிப் பெயர்கள். (௯௧)

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக் குஞ்சுத்த
ஞானமெனுந், தண்டையம் புண்டரி கந்தரு வாய்சண்ட
தண்டவெஞ்சூர், மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்

கொண்டு மண்டிமிண்டக், கண்டுருண் டண்டர்விண் டோடா மல் வேதொட்ட காவலனே.

(ப - ரை) சண்ட தண்டம் - வேகத்தையுடைய தண்டாயு தத்தைக் கைக்கொண்ட, வெம் சூர்-கொடிய சூரபன்மன், மண்ட லம் கொண்டு - பூதத்தைக் கைப்பற்றி, பண்டு - முற்காலத்தில், அண்டர் அண்டம் கொண்டு - தேவருலகையும் கைப்பற்றி, மண்டி மிண்ட - மிகுதியாய்த் துள்ள, கண்டு-பார்த்து, அண்டர் - தேவர் உருண்டு விண்டு ஓடாமல் - உருண்டுவிட்டோடாமல், வேல் தொட்ட காவலனே-வேல் விடுத்த அரசனே!, தொண்டர் கண்டு- அடியார்கள் கண்டு, அண்டி - நெருங்கி, மொண்டு உண்டு இருக் கும் - மொண்டு பருகியிருக்கிற, சுத்தஞானம் என்னும் - மெய்ஞ் ஞான மென்கிற, தண்டையம் புண்டரிகம் - உன் திருவடியை, தருவாய் - அடியேனுக்குத் தந்தருளக்கடவை.

(வி - ரை) முருகவேளின் திருவடி மெய்ஞ்ஞான வடிவின தாதலால் அதனை, 'சுத்த ஞானமெனுந், தண்டையம் புண்டரிகம்' என்றார். (௬௨)

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்டதுவே.

(ப - ரை) மண் கமழ்-மண் பரிமளிக்கிற, உந்தி-திருநாபியை யுடைய, திருமால் - திருமாலின், வலம்புரி ஓசை - வலம்புரிச்சங் கின் ஓசையானது, அந்த விண் கமழ்-அந்த விண்ணுலகத்திற் பரி மளிக்கிற, சோலையும் வாவியும் கேட்டது - சோலையிலும் தடா கத்திலும் கேட்டது; வேல் எடுத்து - வேலாயுதத்தை யேந்திக்

கொண்டு, திண் கிரி சிந்த - வலிய மலைகள் யாவும் பிளந்துவிழ, விளையாடும் - விளையாடுகிற, பிள்ளை - குழந்தைவேலனது, திரு அரையில்-திருவரையிற் கட்டப்பட்ட, கிண்கிணி ஓசை-கிண்கிணியின் ஓசையானது, பதினால் உலகமும் கேட்டது - பதினான்கு லோகத்திலும் கேட்டது.

(வி - ரை) மண்ணுண்ட வுந்தியாதலால் 'மண்கமழுந்தி' என்றார். கிண்கிணி - கிங்கிணி யென்னும் வடசொற் றிரிபு. (கரு)

தெள்ளிய வேனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் றாள்வேட் டிலைசிறு வள்ளிதள்ளித்
துள்ளிய கெண்டையைத்தொண்டையைத் தோதகச்சொல்லை
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே. [நல்ல

(ப - ரை) சிறு வள்ளி தள்ளி - சிறிய வள்ளையைத் தள்ளி, துள்ளிய-துள்ளுகிற, கெண்டையை-கெண்டைமீனையும், தொண்டையை - கோவைக்கனியையும், தோதகச் சொல்லை-கபட வார்த்தையையும், நல்ல - சிறந்த, வெள்ளிய - வெண்மையாகிய, நித்திலம்-முத்துப்போன்ற, வித்தாரம்-விரிவாகிய, மூரலை - பல்லையும், வேட்ட நெஞ்சே-விரும்பின மனமே!, தெள்ளிய ஏனலில் கிள்ளையை - தேர்ந்த தினைப்புனத்திற் கிளியை, கள்ளம் சிறுமியெனும் வள்ளியை - கபடகுணமுள்ள சிறுமியாகிய வள்ளியை, வேட்டவன்-விரும்பினவனாகிய கந்தவேளின், தாள் - திருவடியை, வேட்டிலை-விரும்பினாயில்லை, (இனியாயினும் விரும்புவாய்).

(வி - ரை) வள்ளை யென்றது செவியை. கெண்டையென்றது கண்ணை. தொண்டையென்றது அதரத்தை. மூரல்-பல். (கச)

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்

கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

(ப - ரை) தொல்லை-பழமையாகிய, பெரு நிலம்-பெரிய பூமியை, சூகரம் ஆய்-வராக வுருக்கொண்டு, கீன்றான்-பிளந்தவனாகிய திருமாலுக்கு, மருகன் - மருகன், முருகன் - முருகவேள், க்ருபாகரன் - கருணாகரன், கேள்வியினால் - கேள்வியால், சான்று ஆரும் அற்ற - சாக்ஷி யாரு மில்லாத, தனி வெளிக்கே வந்து சந்திப்பது - ஒப்பற்ற ஞானாகாயத்தில் வந்து கூடுவது, யான் தான் என்னும் சொல் இரண்டும்-யான் தான் என்னும் சொற்க ளிரண்டும், கெட்டால் அன்றி-கெட்டாலல்லது, யாவருக்கும் தோன்றாது - எல்லாருக்கும் வெளியாகாது, சத்தியம் - இது உண்மையாகும்.

(வி - ரை) சூகரம் - வராகம் (பன்றி). கீன்றான் என்றது கீண்டான் என்பதன் சிதைவு. (கூ௫)

தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடினீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

(ப - ரை) தடம் கொற்றம் வேள்-பெரிய வெற்றியையுடைய வேளின், மயிலே - மயூரமே!, இடர் தீர - துன்பமொழிய, தனி விடில்-தனியே விட்டால், நீ-நீ, வடக்கில் கிரிக்கு - வடக்கு மலைக்கு, அப்புறத்தும்-அப்பாலும், நின் - உனது, தோகையின் - கலாபத்தினால், வட்டமிட்டு - சுழன்று, கடற்கு அப்புறத்தும் - கடலுக்கப்பாலும், கதிர்க்கு அப்புறத்தும் - சூரியனுக்கப்பாலும், கனக சக்ர திடர்க்கு அப்புறத்தும்-பொன்மயமாகிய சக்ரவாளகிரிக்கப்பாலும், திசைக்கு அப்புறத்தும் - அஷ்ட திக்குகளுக்கு அப்பாலும், திரிகுவை - உலாவுவை.

(வி - ரை) கடல் என்றது பெரும்புறக்கடலை. திடர்-மேடு, அது ஈண்டைக்கேற்ப மலையைக் குறித்தது. (கூகூ)

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி தாக்க வதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

(ப-ரை) சேலின் திகழ் வயல்-சேல்மீன்களால் விளங்குகிற வயல் சூழ்ந்த, செங்கோடை வெற்பன் - முருகவேளின், செழும் கலபி - செழிய மயிலானது, ஆலித்து - ஆரவாரஞ் செய்து, அனந்தன்-ஆதிசேடனது, பணா முடி தாக்க-பணாமகுடத்தில் மிதிக்க, அதிர்ந்து அதிர்ந்து—, மாணிக்கராசியும்-மாணிக்கத்தொகுதியும், காசினியை பாலிக்கும் மாயனும்-உலகத்தைக் காக்கிற திருமாலும், சக்ராயுதமும் - (அவனது) சக்ராயுதமும், பணிலமும் - சங்கும், காலில் கிடப்பன-(அதன்) காலின் கீழ் கிடப்பனவாம்.

(வி - ரை) கலபி-கலாபத்தை யுடையது (கலாபம்-தோகை). பணாமுடி - படங்களையுடைய தலை. (கூஎ)

கதிதனையொன்றையுங்காண்கின்றிலேன்கந்தவேள்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனைநொந்துநொந்திங்கேயென்றன்மனம் வேகின்றதே.

(ப-ரை) கந்தவேள் முருகா-கந்தவேளாகிய முருகக்கடவுளே!, கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன்-ஒரு கதியையும் காண்கின்றிலேன்; நதிதனை அன்ன - ஆற்றுப்பெருக்குப் போன்ற, பொய் வாழ்வில்-பொய் வாழ்க்கையில், அன்பாய் - அன்புள்ளவனாய், நரம்பால் பொதிந்த-நரம்பினாற் கட்டப்பட்ட, பொதிதனையும் கொண்டு-

பொதியையும் கொண்டு, திண்டாடுமாறு-திண்டாடும்படி, என்னை போதவிட்ட - என்னை வரவிட்ட, விதிதனை - விதியை, நொந்து நொந்து—, இங்கே - இவ்விடத்தே, என் மனம் வேகின்றது - என் மனம் வேகாநின்றது.

(வி - ரை) பொதி - சுமை. கதி - அடைக்கலம். (கூஅ)

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

(ப-ரை) தூவி-தோகையையுடைய, குலம்-மேன்மையுள்ள, மயில்வாகனனே - மயில்வாகனத்தையுடையவனே!, துணை ஏதும் இன்றி-துணையொன்று மில்லாமல், தாவி படர - பற்றி யேற, கொழுகொம்பு இல்லாத - கொள்கொம்பில்லாத, தனிக் கொடி போல்-தனிக்கொடியைப்போல, பாவி தனி மனம்-ஒப்பற்ற பாவி நெஞ்சு, தள்ளாடி வாடி பதைக்கின்றது—, (ஆதலால்) காவி கமலம்-செந்தாமரை மலர்போன்ற, கழலுடன்-உன் திருவடியுடனே, என்னை சேர்த்து-என்னைச் சேர்த்து, காத்தருளாய் - காத்தருளக் கடவை.

(வி - ரை) காவி - செந்நிறம். கழல் - திருவடி. (கூகூ)

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா கிரௌஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

(ப - ரை) கிரௌஞ்ச வெற்பை-கிரவுஞ்சமலையை, அடுதலை சாதித்த - பிளத்தலைச் செய்த, வேலோன் - வேலாயுதன், பிறவி

அற - பிறப்பொழிய, இச்சிறை-இந்தச் சிறையானது, விடுதலைப் பட்டது - விடுதலுண்டாயிற்று; பாச வினை விலங்கு - பாசவினையாகிய தளை, விட்டது - விட்டு நீங்கிற்று; இடுதலை - இரப்பவர்க்கிடுந்தொழிலை, சற்றும் கருதேனை - சிறிதும் நினையாத என்னை, போதம் இல்லேனை - அறிவிலேனை, அன்பால் - அருளினால், கெடுதல் இல்லா - கெடுதியில்லாத, தொண்டரில் - அடியாரோடு, கூட்டியவாறு - சேர்த்தவாறு (என்ன வியப்பு).

(வி - ரை) இடுதல் - ஈதல். போதம் - வடசொல். (க00)

## நூற்பயன்

சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார் [சார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று லொருகவி தான்கற் றறிந்தவரே.

(ப - ரை) கந்தன் - கந்தவேள் விஷயமாயுள்ள, அலங்கார நூற்றுள் - அலங்காரமாகிய நூறு கவிகளுள், ஒரு கவி கற்று அறிந்தவர் - ஒ, கவியைக் கற்று அறிந்தவர், சலம் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார் - கோபத்தையுடைய அரசருக்கும் அஞ்சமாட்டார்; யமன் சண்டைக்கு அஞ்சார் - கூற்றுவன் போர்க்கும் அஞ்சமாட்டார்; துலங்கா நரகக்குழி அணுகார் - (இறந்த பிறகு) விளங்காத நரகக்குழியை யடையார்; துட்டநோய் அணுகார் - கொடுமையாகிய பிறவிப்பிணி யணுகப்பெறார்; புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் - துட்ட மிருகங்களாகிய புலிக்கும் கரடிக்கும் யானைக்கும், கலங்கார் - மனங் கலங்கமாட்டார்.

கந்தரலங்காரம் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

சில பிரதிரூபங்களிலே

## அதிகமாகக் காணப்பட்ட செய்யுள்கள்

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறு மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

(ப - ரை) திருவடியும்-திருத்தாளும், தண்டையும்—, சிலம்பும்—, சிலம்பு ஊடுருவ பொரு-கிரவுஞ்சமலை யூடுருவிப்போம்படி போர் செய்த, வடிவேலும்—, கடம்பும் - கடப்பமலர்மாலையும், தடம் புயம் ஆறிரண்டும் - பெரிய தோள்கள் பன்னிரண்டும், மரு வடிவான வதனங்கள் ஆறும் - மணவடிவாகிய முகங்களாறும், மலர் கண்களும் - தாமரைமலர்போலுந் திருக்கண்களும், குரு வடிவாய் வந்து - ஆசார்ய மூர்த்தமாய் வந்து, என் உள்ளம் குளிர - என் மனங் குளிர, குதிகொண்ட - குடிகொண்டன. (க)

இராப்பக லற்ற விடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுண்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.

(ப - ரை) கரி கூப்பிட்ட நாள் - யானை யழைத்தநாளில், கரா - முதலை, பட - இறக்க, கொன்று-கொலைசெய்து, அ-அந்த, கரி - யானை, போற்ற - வணங்க, நின்ற-நின்ற, கடவுள்-தெய்வம், மெச்ச-மெச்சும்படியான, பராக்ரமம்-வலியுள்ள, வேல-வேலனே!, நிருத சங்கார பயங்கரனே - ராக்ஷஸ ஸம்ஹாரனே! அசுரர்களுக்குப் பயத்தை யுண்டாக்குவோனே!, இராப்பகல் அற்ற இடம் காட்டி—, யான் இருந்தே துதிக்க—, குரா - குராமலரால், புனை-அலங்கரிக்கப்பெற்ற, தாள் - உன் திருவடியை, அருளாய்—. (உ)

செங்கே ழடுத்த சிவனடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினு மங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

(ப-ரை) பதும மலர் - தாமரைமலர்கள், கொங்கு-மணத்தையும், தரளம் - முத்தையும், சொரியும்-சொரிதற்கிடமாகிய, செங்கோடை குமரன் என - செங்கோடைக்குமரவேளே யென்று, எங்கே நினைக்கினும்—, செங்கேழ் அடுத்த - செந்நிறம் பொருந்திய, சிவன் அடிவேலும் - சிவன் ஆதியிலருளின வேற்படையும், திருமுகமும்—, பங்கே நிரைத்த - பக்கத்தில் வரிசையாயுள்ள, நல் பன்னிருதோளும்-அழகிய பன்னிரண்டு புயங்களும் (கொண்டு), அங்கே என்முன் வந்து—, எதிர் நிற்பன் - எதிரே நிற்பார் (௩)

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.

(ப-ரை) வாவி-தடாகங்களோடு, தடவயல் சூழும்-பெரிய வயல்கள் சூழ்ந்த, திருத்தணி மாமலைவாழ்-பெரிய திருத்தணிமலையில் வாழ்கிற, சேவல்கொடி உடையானே!—,அமர சிகாமணியே-தேவசூடாமணியே!, ஆவிக்கு - உயிருக்கு, மோசம் வரும் என்று அறிந்து—, உன் அருள் பதங்கள் - உன் அருளுருவான திருவடிகளை, சேவிக்க என்று - தொழவேண்டுமென்று, நினைக்கின்றிலேன்—, வினை தீர்த்தருளாய்—. (௪)

கொள்ளித் தலையி லெறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே

(ப - ரை) ஒரு கோடி முத்தம் - ஒருகோடி முத்துக்களை, தெள்ளி கொழிக்கும் கடல் - தெள்ளி யிறைக்கிற கடல் சூழ்ந்த, செந்தில் மேவிய - திருச்செந்தூரில் வாழ்கிற, சேவகனே-வீரனே!, வள்ளிக்கு வாய்த்தவனே!—, மயில் ஏறிய மாணிக்கமே!—, கொள்ளித்தலையில் எறும்பதுபோல - கொள்ளியின் நுனியி லகப்பட்ட - எறும்புபோல, குலையும் - பதைக்கிற, என்றன் - எனது, உள்ளத்துயரை - மனோ துக்கத்தை, ஒழித்தருளாய் - நீக்கியருள வேண்டும். (ரு)

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடன் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

(ப - ரை) கடல்மீது - பாற்கடலில், எழுந்த - தோன்றின, ஆலம் - நஞ்சை, குடித்த - பருகின, பெருமான் குமாரன் - சிவ குமாரன், அறுமுகவன் - ஆறுமுகன், (அவனது) வேலும்—, திருக்கையும்—, நமக்கு ஒரு மெய்த்துணை உண்டே - எமக்கொரு உண்மையாகிய துணையா யிருக்கின்றனவே; (அதனால்) சூலம் பிடித்து - சூலத்தைப் பிடித்து, எமபாசம் சுழற்றி - யமபாசத்தைச் சுழற்றி, தொடர்ந்து வரும்-தொடர்ந்து வருகிற, காலன் தனக்கு-காலனுக்கு, ஒருகாலும் அஞ்சேன் - ஒருபொழுதும் அஞ்சமாட்டேன் (யான்). (சு)

உ

சிவமயம்

குகன் துணை

கந்தரலங்காரத்தின்

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அடலருணை | 1 |
| அராப்புனை | 49 |
| அழித்துப் | 2 |
| **ஆ** | |
| ஆங்காரமு | 37 |
| ஆலுக்கணி | 42 |
| ஆவிக்குமோசம் | 69 |
| **இ** | |
| இடுதலை | 66 |
| இராப்பகலற்ற | 68 |
| **உ** | |
| உதித்தாங் | 26 |
| **ஒ** | |
| ஒருபூதரு | 31 |
| ஒருவரை | 9 |
| ஒளியில்விளை | 6 |
| **ஓ** | |
| ஓரவொட்டார் | 4 |
| ஓலையுந்தூதரு | 18 |
| **க** | |
| கடத்திற் | 19 |
| கண்டுண்ட | 25 |
| கதிதனை | 65 |
| கருமான்மருக | 61 |
| கவியாற் | 29 |
| **கா** | |
| காட்டிற் | 57 |
| காவிக்கமல | 66 |
| **கி** | |
| கிழியும்படி | 38 |
| கிளைத்துப் | 22 |
| கின்னங்குறித் | 16 |
| **கு** | |
| குசைநெகிழா | 8 |
| குப்பாசவாழ் | 10 |
| குமராசரணஞ் | 58 |
| **கூ** | |
| கூர்கொண்ட | 52 |
| **கொ** | |
| கொள்ளித்தலை | 69 |
| **கோ** | |
| கோடாதவேத | 51 |
| கோழிக்கொடி | 14 |
| **ச** | |
| சலங்காணும் | 67 |
| சளத்திற்பிணி | 6 |
| **சா** | |
| சாகைக்கு | 37 |
| சாடுஞ்சமர | 46 |
| **சி** | |
| சிகராத்ரி | 36 |
| சிந்திக்கிலே | 41 |
| **சு** | |
| சுழித்தோடு | 24 |
| **சூ** | |
| சூரிற்கிரியிற் | 34 |
| சூலம்பிடித் | 70 |
| **செ** | |
| செங்கேழடு | 69 |
| **சே** | |
| சேந்தனைக் | 48 |
| சேவிற்றிகழ் | 65 |
| சேல்பட்ட | 27 |
| சேல்வாங்கு | 52 |
| **சொ** | |
| சொல்லுகை | 7 |
| சொன்ன | 13 |
| **த** | |
| தகட்டிற் | 55 |
| தடக்கொற்ற | 64 |
| தடுங்கோண் | 11 |
| தண்டாயுத | 17 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தந்தைக்கு | 46 |
| தா | |
| தாவடியோட்டு | 11 |
| தாராகண | 55 |
| தி | |
| திருந்தப்புவன | 4 |
| திருவடியுந் | 68 |
| து | |
| துருத்தியெனும் | 48 |
| தெ | |
| தெய்வத்திரு | 15 |
| தெள்ளியவேன | 63 |
| தே | |
| தேங்கியவண்ட | 56 |
| தேரணியிட்டு | 3 |
| தேனென்று | 7 |
| தொ | |
| தொண்டர் | 61 |
| தோ | |
| தோலாற்சுவர் | 30 |
| நா | |
| நானென்செயும் | 20 |
| நி | |
| நிணங்காட்டு | 29 |
| நீ | |
| நீயானஞான | 32 |
| நீர்க்குமிழி | 44 |
| நீலச்சிகண்டி | 17 |
| நெ | |
| நெற்றுப்பசுங் | 39 |
| ப | |
| பங்கேருக | 60 |
| படிக்கின்றிலை | 50 |
| படிக்குந் | 34 |
| படைபட்ட | 9 |
| பட்டிக்கடாவில் | 43 |
| பத்தித்திருமுக | 32 |
| பத்தித்துறை | 23 |
| பந்தாடுமங்கை | 53 |
| பா | |
| பாதித்திருவுரு | 42 |
| பாலென்பது | 20 |
| பாலேயுனைய | 28 |
| பு | |
| புத்தியைவாங்கி | 33 |
| பெ | |
| பெரும்பைம் | 5 |
| பெறுதற்கரிய | 45 |
| பே | |
| பேற்றைத்தவ | 2 |
| பொ | |
| பொக்கக்குடி | 21 |
| பொங்கார | 40 |
| பொட்டாக | 23 |
| பொருபிடியுங் | 39 |
| போ | |
| போக்கும்வரவு | 49 |
| ம | |
| மண்கமழுந்தி | 62 |
| மரணப்ரமாத | 14 |
| மலையாறு | 35 |
| மா | |
| மாகத்தை | 54 |
| மாலோன்மருக | 60 |
| மு | |
| முடியாப்பிறவி | 22 |
| மை | |
| மைவருங் | 56 |
| மொ | |
| மொய்தாரணி | 15 |
| யா | |
| யான்றனெனுஞ் | 63 |
| வ | |
| வணங்கித்துதி | 59 |
| வரையற் | 41 |
| வி | |
| விழிக்குத்துணை | 47 |
| வெ | |
| வெட்டுங்கடா | 44 |
| வே | |
| வேடிச்சி | 36 |
| வேதாகமசித்ர | 12 |
| வேலாயுதன் | 58 |
| வேலேவிளங்கு | 19 |
| வை | |
| வையிற்கதிர் | 12 |


செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.